# தினபூமி

thinaboomi.com

பூமி: 31 சுற்று: 248 ஆடி 27

Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94

திருச்சி, செவ்வாய், ஆகஸ்ட் 12, 2025 ‣ சென்னை ‣ மதுரை ‣ திருச்சி ‣ கோவை ‣ நெல்லை ‣ சேலம் ‣ வேலூர் ‣ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




**காசாவை ஆக்கிரமிப்பது எங்களுடைய நோக்கமல்ல: இஸ்ரேல் பிரதமர் பேச்சு**

....2-ம் பக்கம்

**டெல்லியில் நான்கு இடங்களில் எம்.பி.க்களுக்கு குடியிருப்புகள் பிரதமர் மோடி திறந்து வைத்தார்**

...3-ம் பக்கம்

**17-வது ஆசிய கோப்பை தொடர்: இந்திய அணியின் புதிய துணை கேப்டனாக சுப்மன் நியமனம்..?**

....6-ம் பக்கம்





● திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் வேலம்பாளையத்தில் ரூ.48 கோடியே 68 லட்சம் செலவில் கட்டடப்பட்டுள்ள புதிய அரசு மருத்துவமனையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இதில் அமைச்சர்கள் க.முத்துசாமி, மு.பெ.சாமிநாதன், அர.சக்கரபாணி, என்.கயல்விழி, பாராளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, மாவட்ட கலெக்டர் மனிஷ் நாரணவரே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### வாக்குத்திருட்டு முறைகேடு விவகாரம்:

# சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்

## ராகுல் காந்தியின் சான்றுகளை மேற்கோள் காட்டி தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

சென்னை, ஆக. 12-

**ராகுல் காந்தி கொடுத்துள்ள வாக்குத் திருட்டு சான்றுகள் மோசடியை அம்பலப்படுத்துகின்றன என்றும் தேர்தல் ஆணையத்தை மோசடி இயந்திரமாக பா.ஜ.க. மாற்றியுள்ளது என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள தனது எக்ஸ் பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:-



M.K.Stalin
@mkstalin

The BJP has turned the Election Commission into its poll rigging machinery. What happened in #Bengaluru's #Mahadevapura is not an administrative lapse, it is a calculated conspiracy to steal the people's mandate.

The #VoteTheft evidence presented by my brother and LoP Thiru. @RahulGandhi exposes the scale of this fraud. Today, as Thiru. #RahulGandhi leads MPs of the #INDIA bloc in a march from Parliament House to the #ECI, we demand

- The immediate release of complete machine readable voter roll for every State,
- An end to politically driven deletions, and
- An independent probe into this subversion of our democracy.

#DMK stands shoulder to shoulder in this fight. We will not watch in silence while the BJP robs India's democracy in broad daylight. #VoteChori #RahulExposesVoteChori

தேர்தல் ஆணையத்தை பா.ஜ.க. தனது தேர்தல் மோசடி இயந்திரமாக மாற்றியுள்ளது. பெங்களூருவின் மகாதேவபுராவில் நடந்தது நிர்வாகக் குறைபாடு அல்ல, மக்களின் தீர்ப்பைத் திருடுவதற்கான திட்டமிட்ட சதி. ராகுல் காந்தி கொடுத்துள்ள வாக்குத் திருட்டு சான்றுகள் இந்த மோசடியை அம்பலப்படுத்துகின்றன.

நேற்று பாராளுமன்ற வளாகத்திலிருந்து தேர்தல் ஆணையம் நோக்கி ராகுல் காந்தி தலைமையில் இன்டியா கூட்டணி எம்.பி.க்கள் பேரணி நடத்துகினர். இந்தப் போராட்டத்தில் தி.மு.க. தோளோடு தோள் நிற்கிறது. கணினியால் படித்தறியக் கூடிய வடிவத்தில் அனைத்து மாநிலங்களின் வாக்காளர் பட்டியல் கோப்பும் உடனடியாக அளிக்கப்பட வேண்டும்.

அரசியல் ரீதியாக நீக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். வாக்குத் திருட்டு முறைகேடு குறித்த ராகுல்காந்தியின் குற்றச்சாட்டு குறித்து சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

இந்தியாவின் ஜனநாயகத்தை பட்டப்பகலில் பா.ஜ.க. கொள்ளையடிப்பதை பார்த்துக்கொண்டு நாங்கள் அமைதியாக இருக்க மாட்டோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### திருப்பூர் மாவட்டத்திற்கு புதிதாக 7 அறிவிப்புகள்:

# பரம்பிக்குளம் ஆழியாறை தூர்வார 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்

## அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

உடுமலை, ஆக. 12-

**திருப்பூர் மாவட்டம் உடுமலையில் அரசு விழாவில் பங்கேற்ற பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.**

இதன்பின் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:- அண்ணா, கலைஞர் படங்களில் பாடல் இயற்றிய நாராயண கவியின் சொந்த ஊர் உடுமலை. இயற்கை எழில் சூழ்ந்து, சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு இனிப்பான சர்க்கரை அள்ளித்தரும் ஊர் உடுமலை. இயற்கை, கலை, இலக்கியம் என அனைத்து துறைகளின் கோட்டை தான் உடுமலைப்பேட்டை. ஆறுகள், மலைகள் என இயற்கை எழில் சூழ்ந்த உடுமலைக்கு வந்ததில் மகிழ்ச்சி. பெரியாரும், அண்ணாவும் சந்தித்த திருப்பூர் மாவட்டங்களில் விழா நடைபெறுகிறது. தி.மு.க. ஆட்சியில் திருப்பூர் மாவட்டத்திற்கு எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. காங்கேயம் அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட உள்ளது.தாராபுரம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தப்பட உள்ளது. ரூ.172 கோடியில் நொய்யல் ஆறு மேம்பாடு செய்யப்பட உள்ளது. கீழக்கோவிலில் பேருந்து நிலையம் அமைக்கப்பட உள்ளது. திருப்பூர் நியோ டைடல் பூங்கா, 7 ஊராட்சிகளுக்கு கூட்டுக்குடிநீர் செயல்படுத்தப்பட உள்ளது. நீராறு, நல்லாறு, ஆனைமலையாறு திட்டப்பணிகளை விரைவில் செயல்படுத்த உள்ளோம்.

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனப்பகுதியை தூர்வார ரூ.10 கோடி ஒதுக்கப்படும். நவீன வசதிகளுடன் ரூ.9 கோடியில் மாவட்ட மைய நூலகம் அமைக்கப்படும். ரூ.5 கோடியில் பல்நோக்கு விளையாட்டு அரங்கம், உப்பாற்றின் குறுக்கே ரூ.7 கோடியில் புதிய தடுப்பனை கட்டப்படும். ரூ.6.5 கோடியில் புதிய வெண்ணெய் தொழிற்சாலை அமைக்கப்படும். அரசு பள்ளிக்கு நிலம் அளித்த சாதிக் பாட்ஷா பெயரில் சாலை அமைக்கப்படும். இவ்வாறு பல்வேறு புதிய திடங்களை முதல்வர் அறிவித்தார்.

### எதிர்க்கட்சிகள் கடும் அமளி:

# பாராளுமன்றம் ஒத்திவைப்பு

புதுடெல்லி, ஆக. 12-

**எதிர்க்கட்சிகளின் தொடர் அமளியால் பாராளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.**

பாராளுமன்றத்தின் இரு அவைகளும் வழக்கம்போல் நேற்று காலை 11 மணிக்குக் கூடின.

மக்களவையில் வழக்கமான அலுவல்கள் நேற்று காலை தொடங்கியதும், எதிர்க்கட்சிகள் பல்வேறு விவகாரங்களை எழுப்பி கடும் அமளியில் ஈடுபட்டனர். இதனால் கோபம் அடைந்த சபாநாயகர் ஓம் பிர்லா, தொடர்ந்து 14வது நாளாக அவை நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன என்று குறிப்பிட்டார்.

மக்களின் வரிப்பணம் வீணாகிறது. உறுப்பினர்கள் அவை நடவடிக்கைக்கு இடையூறு செய்யக்கூடாது என்று வலியுறுத்தினார். எனினும், எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர்.

இதனால் அவை நேற்று பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. அதேபோல் ராஜ்யசபாவிலும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டனர். இதன் காரணமாக அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

# 2 மசோதாக்கள் நிறைவேற்றம்

டெல்லி, ஆக. 12-

**பாராளுமன்ற மக்களவையில் விளையாட்டுத் துறை தொடர்பான இரண்டு மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.**

பீகார் மாநில வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக போராடி வருகின்றன.

நேற்று தேர்தல் ஆணையம் நோக்கி பேரணி செல்ல முயன்றனர். இதனால் பாராளுமன்ற மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே, மக்களவையில் விளையாட்டுத் துறை தொடர்பான இரண்டு மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த மசோதா தொடர்பான விவாதம் நடைபெறும்போது, பெரும்பாலான எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டம் நடத்தியதால் தடுத்து நிறுத்தப்பட்டனர். ராகுல் காந்த உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டனர். பின்னர், உறுப்பினர்கள் அவைக்கு திரும்பிய போதிலும், முழக்கமிட்டனர். இதற்கிடையே சுருக்கமான விவாத்திற்குப் பிறகு குரல் வாக்கெடுப்பு மூலம் இரண்டு மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டன.

தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா, தேசிய ஊக்க மருந்து தடுப்பு திருத்த மசோதா ஆகியவை நிறைவேற்றப் பட்டுள்ளது.

தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா இந்த மசோதா விளையாட்டு நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு, மற்றும் விளையாட்டு வீரர்களின் நலன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2036 ஒலிம்பிக் போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கான தயாரிப்பு மற்றும் சர்வதேச அளவில் இந்திய விளையாட்டு வீரர்களின் பங்களிப்பை மேம்படுத்துவது இதன் முக்கிய இலக்குகளாகும். விளையாட்டு சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், விதிமுறைகளை வகுக்கவும் ஒரு தேசிய விளையாட்டு வாரியம் அமைக்கப்படும். மத்திய அரசின் நிதியுதவி பெறுவதற்கு, அனைத்து சம்மேளனங்களும் இந்த வாரியத்தில் அங்கீகாரம் பெற வேண்டும்.

தேர்தல் முறைகேடு, நிதி தவறாகப் பயன்படுத்துதல், அல்லது ஆண்டு தணிக்கைக் கணக்கு வெளியிடத் தவறினால், சம்மேளனங்களின் அங்கீகாரத்தை ரத்து செய்யும் அதிகாரம் இந்த வாரியத்திற்கு உள்ளது.

# தமிழகத்தில் 3 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, ஆக. 12-

**தமிழகத்தில் திருவள்ளூர், ராணிபேட்டை உள்ளிட்ட 3 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக வானிலை மையம் கூறியிருப்பதாவது:- வடக்கு ஆந்திரா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. வருகின்ற 13-ம் தேதி வாக்கில் வடமேற்கு மற்றும் அதனை ஒட்டியுள்ள மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக் கூடும். இதன் காரணமாக இன்று வடதமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், திருவள்ளூர், ராணிபேட்டை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

நாளை வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும்.

திருவள்ளூர், ராணிபேட்டை, வேலூர், திருப்பத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தேர்தல் ஆணையம் நோக்கி பேரணி: ராகுல் உள்ளிட்ட

# எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கைது

புதுடெல்லி, ஆக. 12-

**தேர்தல் ஆணையம் நோக்கி பேரணி சென்ற ராகுல் காந்தி, இன்டியா கூட்டணி எம்.பி.க்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**



வாக்காளர் பட்டியல் முறைகேடு குறித்து விசாரணை நடத்த வலியுறுத்தியும், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் டெல்லியில் நேற்று பாராளுமன்ற வளாகத்தில் இருந்து இந்திய தலைமை தேர்தல் ஆணையம் நோக்கி இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் பிரமாண்ட பேரணி நடத்தினர். ராகுல் காந்தி தலைமையில் இந்த பேரணி நடைபெற்றது.

இதில், 25 கட்சிகளை சேர்ந்த எம்.பி.க்கள் பங்கேற்றனர். காங்கிரஸ், சமாஜ்வாதி, திரிணமூல் காங்கிரஸ், திமுக, ஆம் ஆத்மி, இடதுசாரிகள், ராஷ்ட்ரிய ஜனதா தளம், தேசியவாத காங்கிரஸ் (சரத்பவார் பிரிவு), சிவசேனா (யுபிடி) மற்றும் தேசிய மாநாட்டுக் கட்சி உள்ளிட்ட கட்சிகளின் எம்.பி.க்கள் கலந்து கொண்டனர். திமுக சார்பில் கனிமொழி எம்.பி, திருச்சி சிவா, டி.ஆர். பாலு, துரை வைகோ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பேரணியாக சென்ற எம்.பிக்களை டெல்லி காவல் துறை தடுத்து நிறுத்தியது. இதைத்தொடர்ந்து எம்.பிக்களுடன் டெல்லி காவல்துறை பேச்சு வார்த்தை நடத்தினர்.

இதற்கிடையே, பிரியங்கா காந்தி உள்ளிட்ட எம்.பிக்கள் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சில எம்.பி.க்கள் போலீசாரின் தடுப்புகளை தாண்டிக்குதித்து போராட்டம் நடத்தினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பான சூழல் நிலவியது.

இந்த நிலையில், தேர்தல் ஆணைய அலுவலகத்தை நோக்கி பேரணி சென்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தடுப்பு காவலில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடன் சென்ற பிரியங்கா காந்தி, கே.சி.வேணுகோபால், அகிலேஷ் யாதவ், சஞ்சய் ராவத், சாகரிகா கோஷ், கனிமொழி, ஜோதிமணி எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன், திருச்சி சிவா, உள்ளிட்ட எம்.பி.க்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட அனைவரும் போலீஸ் பேருந்தில் ஏற்றப்பட்டு அருகில் உள்ள மண்டபத்தில் வைக்கப்பட்டனர்.

கைதுக்கு பின் பேருந்தில் இருந்தவாறு ராகுல் காந்தி கூறுகையில்,

பா.ஜ.க.வால் பேச முடியாது; ஏனென்றால் உண்மை நாட்டின் முன் உள்ளது. இந்தப் போராட்டம் அரசியல் சார்ந்தது அல்ல. இந்தப் போராட்டம் அரசியலமைப்பைக் காப்பாற்றுவதற்கானது. இந்தப் போராட்டம் ஒரு மனிதன், ஒரு வாக்குக்கானது. எங்களுக்கு தூய்மையான வாக்காளர் பட்டியல் வேண்டும் என்று கூறினார்.

### நாடு முழுவதும் மக்கள் வசிக்கும் பகுதிகளில்

# தெரு நாய் இல்லாத பகுதியாக மாற்ற வேண்டும்: சுப்ரீம் கோர்ட்

புதுடெல்லி, ஆக. 12-


**நாடு முழுவதும் மக்கள் வசிக்கும் அனைத்து பகுதிகளையும் தெரு நாய் இல்லாத பகுதியாக மாற்ற வேண்டும், நாடு முழுவதும் இந்த பிரச்சனைகளை போர்க்கால அடிப்படையில் தீர்க்க வேண்டிய நிலை உள்ளது என சுப்ரீம் கோர்ட் தெரிவித்துள்ளது.**

டெல்லியில் தெருநாய்க்கடி சம்பவங்களை தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்த சுப்ரீம் கோர்ட், நேற்று அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது. 8 வாரங்களுக்குள் தலைநகர் டெல்லியில் சுற்றித்திரியும் அனைத்து தெரு நாய்களையும் பிடித்து நாய் காப்பகங்களில் அடைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

மேலும் சுப்ரீம் கோர்ட் கூறியதாவது: நாடு முழுவதும் மக்கள் வசிக்கும் அனைத்து பகுதிகளையும் தெரு நாய் இல்லாத பகுதியாக மாற்ற வேண்டும். தெரு நாய் பிரச்சனைகளை போர்க்கால அடிப்படையில் தீர்க்க வேண்டிய நிலை உள்ளது. தெருநாய்க்கடி தொடர்பான தகவலை தெரிவிக்க ஹெல்ப் லைனை ஒருவாரத்தில் அமைக்க வேண்டும். அப்போதுதான் அனைத்து நாய்க்கடி சம்பவங்களும் பதிவு செய்யப்படும்.

ஏதாவது ஒரு தனிநபரோ அல்லது அமைப்போ புகார் அளித்தால் 4 மணி நேரத்தில் தெருநாய்களை பிடிக்க வேண்டும். இதில் யாராவது குறுக்கீட்டு செய்தால் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பிடிக்கப்படும் நாய்களுக்கு கருத்தடை செய்ய வேண்டும். அவற்றை விடுவிக்கவும் கூடாது என்று தெரிவித்துள்ளது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| 746.29 | 221.75 |
| பாயின்ட் 80,604.08 | பாயின்ட் 24,585.05 |




**தங்கம்**
1 சவரன் ₹74,920
1 கிராம் ₹9,375



**வெள்ளி**
1 கிலோ ₹127,000
1 கிராம் ₹127.00



**டாலர்** ₹87.68



**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34

# காசாவை ஆக்கிரமிப்பது எங்களுடைய நோக்கமல்ல: இஸ்ரேல் பிரதமர் பேச்சு

**ஜெருசலேம், ஆக. 12-**

காசாவை ஆக்கிரமிப்பது எங்களுடைய நோக்கமல்ல என்று இஸ்ரேல் பிரதமர் கூறியுள்ளார்.



இஸ்ரேல் ராணுவத்துக்கும், காசாவில் உள்ள ஹமாஸ் இயக்கத்தினருக்கும் இடையே பல மாதங்களாக சண்டை நடந்து வருகிறது. காசா மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது. அதற்கு எதிர்ப்பு எழுந்துள்ளது. இது குறித்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியதாவது:-

காசா பகுதியில் பொது மக்கள் கொல்லப்படுதல், சேதம், உதவிப்பொருட்கள் கிடைக்காதது என அனைத்துக்கும் ஹமாஸ் இயக்கம் தான் காரணம். காசாவில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை குறுகிய காலத்தில் முடிக்க திட்டமிட்டுள்ளோம். ஹமாஸ் இயக்கத்தை ஒழித்துக்கட்டி, வேலையை முடிப்பதை தவிர வேறு வழியில்லை.

காசாவை ஆக்கிரமிப்பது எங்கள் நோக்கமல்ல. அதை விடுவிப்பதுதான் இலக்கு. ஆனால், இஸ்ரேலுக்கு உள்ளேயும், வெளியேயும் சர்வதேச அளவில் பொய் பிரசாரம் நடந்து வருகிறது. காசாவை ராணுவமயத்தில் இருந்து விடுவித்தல், இஸ்ரேல் ராணுவம் பாதுகாப்பை மேற்கொள்ளுதல், இஸ்ரேல் அல்லாத சிவில் நிர்வாகம் பொறுப்பேற்றல் ஆகியவைதான் எங்கள் இலக்குகள். நிறைய வெளிநாட்டு பத்திரிகையாளர்களை அழைத்து வந்து காட்டுமாறு இஸ்ரேல் ராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளேன். பணயக் கைதிகளை விடுவித்து, ஆயுதங்களை ஹமாஸ் அமைப்பினர் ஒப்படைத்தால் காசாவில் நாளையே போர் முடிந்துவிடும். இவ்வாறு அவர் கூறினார்.

## கூலி திரைப்படத்தை இணையத்தில் வெளியிட உயர் நீதிமன்றம் தடை

**சென்னை, ஆக. 12-**

கூலி திரைப்படத்தை இணையத்தில் வெளியிட தடை சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

கூலி திரைப்படத்தை திருட்டுத்தனமாக இணையத்தில் பதிவேற்றம் செய்து வெளியிட தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தை மீறும் குறிப்பிட்ட இணையதளங்களில் திருட்டுத்தனமாக கூலி படத்தை வெளியிடுவதற்கு அனுமதியளிக்கக் கூடாது என்று இந்தியா எங்கிலும் 36 இணையதள சேவை வழங்கு தளங்களுக்கு கட்டுப்பாடு விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வரும் ஆகஸ்ட் 14-ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவிருக்கும் கூலி படத்தை இணையத்தில் முறைகேடாக வெளியிடுவதற்கான தடை கோருவது தொடர்பாக, படத்தை தயாரித்துள்ள சன் பிக்சர்ஸ் நிறுவனம் தரப்பிலிருந்து தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையில் சென்னை உயர்நீதிமன்றம் மேற்கண்ட இடைக்கால உத்தரவைப் பிறப்பித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தற்போது சட்டத்தை மீறி திரைப்படங்களைப் பதிவேற்றம் செய்வதை வாடிக்கையாக கொண்டு செயல்பட்டு வரும் இணையதளங்களை முடக்குவதுடன், இனி வருங்காலத்தில் இதுபோன்ற இணையதளங்கள் ஏதேனும் வருமாயின் அவற்றையும் முடக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இத்தகைய முறைகேடான நடவடிக்கைகள் தடுக்கப்படாவிட்டால் அதனால் தயாரிப்பாளர்களுக்கு பெரும் இழப்பு ஏற்படும் என்றும் நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவில் வலியுறுத்தியுள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியிலுள்ள நீர்வளத் துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு சி.சுப்பிரமணியம் வளாகம் என்று பெயர் சூட்டப்பட்டு அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில், பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம் தொடங்க முக்கிய காரணமாக இருந்த பெருந்தலைவர் காமராசர், முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.கே. பழனிசாமி மற்றும் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் ஆகியோருக்கு நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலைகளை திறந்து வைத்தார்.

### வாக்காளர் பட்டியலில் முறைகேடு விவகாரம்:

# ராகுல் குற்றச்சாட்டை விமர்சித்த காங்கிரஸ் அமைச்சர் ராஜினாமா

**பெங்களூரு, ஆக. 12-**

பாராளுமன்ற தேர்தலில் வாக்காளர் பட்டியலில் முறைகேடு குறித்து ராகுல் காந்தியின் குற்றச்சாட்டை விமர்சித்த காங்கிரஸ் அமைச்சர் ராஜினாமா செய்துள்ளார்.

கர்நாடகாவில் சித்தராமையா தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது. இதில் மாநில கூட்டுறவு மந்திரியாக ராஜண்ணா செயல்பட்டு வந்தார். அவர் வாக்கு திருட்டு தொடர்பாக ராகுல் காந்தி சுமத்திய குற்றச்சாட்டை விமர்சித்தார். இது தொடர்பாக நேற்று பேசிய ராஜண்ணா, வாக்காளர் பட்டியல் எப்போது தயாரிக்கப்பட்டது. நமது (காங்கிரஸ்) அரசு ஆட்சியில் இருந்தபோதுதான் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டது.

இது தொடர்பாக நாம் பேசினால் சங்கடமான உண்மைகள் வெளியே வரும். வாக்காளர் பட்டியலில் குளறுபடிகள் நடந்துள்ளனர். அது உண்மைதான். அது நமது ஆட்சியில் நம் கண் முன்னே நடந்துள்ளன. இதற்காக நாம் வெட்கி தலைகுனிய வேண்டும். அப்போது நாம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வருங்காலங்களில் தேர்தல் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியாகும்போது நாம் இன்னும் கவனமாக இருக்க வேண்டும்' என்றார். இந்நிலையில், ராகுல் காந்தியின் குற்றச்சாட்டை விமர்சித்த கர்நாடக காங்கிரஸ் மந்திரி ராஜண்ணா தனது பதவியை ராஜினாமா செய்தார்.

# திருப்பூரில் 19,785 பயனாளிகளுக்கு ரூ.295.29 கோடியில் திட்டஉதவிகள்

### ரூ.949 கோடியில் 61 முடிவுற்ற பணிகள் திறப்பு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

**திருப்பூர், ஆக. 12-**

திருப்பூரில் முதல்வர் ஸ்டாலின் 19,785 பயனாளிகளுக்கு ரூ. 295 கோடியே 29 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும், ரூ.949 கோடி மதிப்பீட்டிலான 61 முடிவுற்ற பணிகளையும் திறந்து வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:- தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று (11.08.2025) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் நடைபெற்ற அரசு விழாவில், ரூ. 949 கோடியே 53 லட்சம் செலவில் 61 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூ.182 கோடியே 06 லட்சம் மதிப்பீட்டிலான 35 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ. 295 கோடியே 29 லட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை 19,785 பயனாளிகளுக்கு வழங்கினார்.

திருப்பூர் மாவட்டத்தில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்:- நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில், திருப்பூர் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் ரூ. 798 கோடியே 88 லட்சம் செலவில் பாதாள சாக்கடை பணிகள்; திருப்பூர் கோவில்வழி பகுதியில் ரூ. 34 கோடியே 80 லட்சம் செலவில் புதிய பேருந்து நிலையம்; மூலனூர் பேரூராட்சி, அண்ணாநகரில் ரூ. 2 கோடியே 8 லட்சம் செலவில் மேம்படுத்தப்பட்ட வாரச்சந்தை; ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், திருப்பூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பொதுசேவை மையக் கட்டிடங்கள், உணவு தானியக் கிடங்குகள், ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்கள், ஊராட்சிமன்ற அலுவலகக் கட்டிடங்கள், நியாய விலைக் கட்டிடங்கள், நூலகக் கட்டிடங்கள், உணவு சேமிப்புக் கிடங்கு, அங்கன்வாடிக் கட்டிடங்கள், வட்டார சுகாதார நிலையம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் வகுப்பறைக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், துணை சுகாதார நிலையங்கள் என ரூ. 10 கோடியே 90 லட்சத்து 76 ஆயிரம் செலவிலான முடிவுற்றப் பணிகளை முதல்வர் திறந்து வைத்தார்.

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில், பல்லடம் சேமிப்புக்கிடங்கில் ரூ. 2 கோடியே 36 லட்சத்து 33 ஆயிரம் செலவில் கூடுதலாக 3400 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு; நீர்வளத் துறை சார்பில், காங்கயம் வட்டம், வீரணம்பாளையம், காட்டுநாயக்கன்பாளையம் அருகில் வட்டமலைகரை ஓடையில் ரூ. 3 கோடியே 91 லட்சம் செலவில் தடுப்பணை; மகளிர் திட்டம் சார்பில், தளி பேரூராட்சி, திருமூர்த்தி மலை பஞ்சலிங்கஅருவி செல்லும் வழியில் ரூ. 10 லட்சம் செலவில் 1 தற்காலிக மதி அங்காடி; தொழில் முதலீடு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை சார்பில், திருப்பூர் திருமுருகன்பூண்டி நகராட்சி பகுதியில் ரூ. 39 கோடியே 44 லட்சம் செலவில் மினி டைடல் பூங்காவை முதல்வர் திறந்து வைத்தார்.

வனத்துறை சார்பில், சின்னார், மனுப்பட்டி, காங்கயம் ஆகிய இடங்களில் ரூ. 20 லட்சத்து 57 ஆயிரம் செலவில் வனச்சோதனை சாவடிகளில் முன் கள பெண் வன ஊழியர்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகள், அமராவதி வனச்சரகத்தில் ரூ. 11 லட்சத்து 57 ஆயிரம் செலவில் வனக்காவலர் குடியிருப்புகள்; மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், அவிநாசி அரசு மருத்துவமனையில் ரூ. 6 கோடி செலவில் தாய் சேய் நலப் பிரிவுக் கட்டிடம், 15.வேலம்பாளையத்தில் ரூ. 48 கோடியே 68 லட்சம் செலவில் புதிய அரசு மருத்துவமனை, ரூ. 50 லட்சம் செலவில் குன்னத்தூர் வட்டார பொது சுகாதார அலகு, பள்ளபாளையம், அங்கேரிபாளையம், ஈ.ஆர்.பி.நகர் ஆகிய இடங்களில் ரூ. 90 லட்சம் செலவில் துணை சுகாதார நிலையக் கட்டிடங்களை முதல்வர் திறந்து வைத்தார்.


பால்வளத் துறை சார்பில், தளவாய்ப்பட்டணம் மற்றும் தண்ணீர்பந்தல் பாளையம் ஆகிய இடங்களில் ரூ. 65 லட்சம் செலவில் தொகுப்பு பால் குளிர்விப்பு நிலையங்கள்; என மொத்தம், ரூ. 949 கோடியே 53 லட்சம் செலவில் 61 முடிவுற்றப் பணிகளை முதல்வர் நேற்று திறந்து வைத்தார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

**தருமபுரி, ஆக. 12-**

ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து நேற்று அதிகரித்து காணப்பட்டது.


கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது. இந்த நிலையில் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லுக்கு நேற்று முன்தினம் 8 ஆயிரம் கன அடியாக வந்தது.



காவிரி நீர்ப்பிடிப்பு தமிழக எல்லை பகுதிகளான அஞ்செட்டி, கேரட்டி, நாட்றாம்பாளையம், ராசி மணல், ஊட்டமலை உள்ளிட்ட பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக நேற்று காலை 8 மணி நிலவரப்படி 9,500 கன அடியாக தண்ணீர் வந்தது. 9 மணி நிலவரப்படி நீர்வரத்து 14 ஆயிரம் கனஅடியாக அதிகரித்தது.

இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. சுற்றுலா பயணிகள் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்து மகிழ்ந்தனர். பின்னர் அவர்கள் மெயின் அருவியில் ஆனந்தமாக குளித்து மகிழ்ந்தனர். அவர்கள் மீன் சாப்பாடு வாங்கி கொண்டு பூங்காவில் அமர்ந்து சாப்பிட்டு மகிழ்ந்தனர். காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

12-08-2025



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** தாய், மனைவி, சகோதரி போன்ற அன்புமிக்க பெண்களின் ஆதரவைப் பெறுவீர்கள். நல்ல வாகன யோகம் உண்டு. அரசுப் பணிகளில் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். புத்தாடை அணிகலன்கள் புதிதாகச் சேரும்.

**ரிஷபம்:-** இன்று, தன்னம்பிக்கை அதிகரிக்கும். முன்னேற்ற வாய்ப்புகள் தேடி வரும். அரசு ஆதரவும், அனைத்துக் காரியங்களும் வெற்றியில் முடியும். அறிவு விருத்தியும், புத்தி தெளிவும் ஏற்படும்.

**மிதுனம்:-** ஆரோக்கியம் மேம்படுவதோடு, குழந்தை பாக்கியம் ஏற்படும். புகழும், கௌரவமும் ஓங்கும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெறுவார். வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு தனலாபம் உண்டு.

**கடகம்:-** நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை. நினைத்தபடி எதுவும் நடக்காது. திடீர் நடுக்கம். பயம் ஆகியவை ஏற்படும். எதிலும் நிதானமாக நடக்க வேண்டிய சந்திராஷ்டம நாள். எச்சரிக்கை தேவை.

**சிம்மம்:-** இன்று, பேச்சுத் திறமையால் மிகப் பெரிய காரியங்களையும் எளிதாகச் செய்து முடிப்பீர்கள். அரசு வழியில் அதிகாரிகள் உதவியால் ஆதாயம் அடைவார். புது புது ஆடைகள் மனைவியால் நன்மையும் அடைவர்.

**கன்னி:-** பயணத்தில் பலவித நன்மைகள் ஏற்படும். பல வழிகளிலும் தனவரவு உண்டு. அதன் காரணமாக ஆனந்தம் பொங்கும். சிலர் வீடு வாங்கும் எண்ணத்தில் கடனுக்கு முயற்சி செய்வர். புதிய நட்பு கிடைக்கும்.

**துலாம்:-** சுகமும், பாக்கியமும் விருத்தியாகும். மனதில் உறுதியும், புதிய உற்சாகமும் உண்டாகும். பகைவர்கள் விலகி ஓடுவர். மனைவியின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும் குழந்தைகள் மீது பாசம் பெருகும்.

**விருச்சிகம்:-** அன்னையின் உடல் நிலையில் அக்கறை தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்ய வேண்டிய நாள். வாகன சுகம் குறையும். இனிய தூக்கமும் குறையும்.

**தனுசு:-** மனத்தெம்பும், மனமகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள். தனவரவும், புதிய நண்பர்கள் சேர்க்கை என புதிய உற்சாகம் பொங்கும். தொழில் விரிவாக்கத்துக்கு துணைபுரியும். வாகன சுகம் குறையும்.

**மகரம்:-** சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இருக்க வேண்டிய நாள். படிப்பில் கவனம் இருந்தால் கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். பணியில் அலட்சியப் போக்குகள் அல்லல் தரலாம்.

**கும்பம்:-** பெரியோர் மீது அன்பும், பாசமும் பெருகும். நல்ல புதிய வாகன யோகம் உண்டு. அரசுப் பணியில் உள்ளவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் கிடைக்கும். வியாபாரத்தில் ஏற்படும் பணவரவால் மனத் திருப்தி உண்டாகும்.

**மீனம்:-** சுமாரான நாள். சோம்பலை விட்டு சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய நாள். படிப்பில் அதிக கவனம் தேவை. அலட்சியம் அல்லல் தரலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தள்ளிப் போடுவது நல்லது.



மதுரைக்கு வருகை தரும் அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது குறித்து மேற்கு 1-ம் பகுதி அ.தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் எஸ்.எம்.டி.ரவி தலைமையில் நடந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. ஆலோசனைகளை வழங்கி பேசினார். இதில் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர். செல்வகுமார், ஏ.தங்கபாண்டி, போஸ், பாலமுருகன், சண்முகசுந்தரம், செந்தில், சரவணன், ராமகிருஷ்ணன், பால்பாண்டி, பாலசக்திவேல் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கைது ஒரு ஜனநாயக படுகொலை

## உத்தவ் தாக்கரே கண்டனம்

**டெல்லி, ஆக. 12-**

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கைது செய்யப்பட்டதால் ஜனநாயகத்தின் படுகொலையை உலகம் கண்டுள்ளதாக உத்தவ் தாக்கரே தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையம் பீகார் மாநிலத்தில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு திருத்த பணியை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் சுமார் 50 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் வாக்கு திருட்டில் ஈடுபடுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன. முக்கியமாக மக்களவை எதிர்க்கட்சி தலைவரான ராகுல் காந்தி, தன்னிடம் ஆதாரம் இருப்பதாக தெரிவித்து வருகிறார்.

இந்த நிலையில் பீகார் மாநில எஸ்.ஐ.ஆரை கண்டித்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பாராளுமன்ற வளாகத்தில் இருந்து தேர்தல் ஆணையத்தின் தலைமையகம் நோக்கி பேரணி சென்றனர். பேரணியின்போது ராகுல் காந்தி உள்ளிட்ட எம்.பி.க்கள் கைது செய்யப்பட்டனர். இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன. இந்த நிலையில், பேரணியில் ஈடுபட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கைது செய்யப்பட்டதன் மூலம், உலகம் ஜனநாயகத்தின் படுகொலையை கண்டுள்ளது உன சிவசேனா தலைவர் உத்தவ் தாக்கரே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும், போராட்டத்தில் அரசு ஏன் தலையீடு செய்கிறது என்பதற்கு, இது தற்போதைய சாட்சி எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பீகார்: ஆசிரியர் கையில் 15 ஆயிரம் ராக்கிகளை கட்டிய மாணவிகள்..!

**பாட்னா, ஆக. 12-**

பீகாரை சேர்ந்த பிரபல ஆசிரியர் கான். கான் சார் என தனது மாணவர்களால் செல்லமாக அழைக்கப்படும் இவர் தனியார் கல்வி நிறுவனம் அமைத்து போட்டி தேர்வுகளாக பயிற்சி அளித்து வருகிறார். குறைந்த கட்டணத்தில் அதிக மாணவர்களை படிக்க வைத்து கல்வி சேவை ஆற்றுகிறார். இவரிடம் படித்த பல மாணவர்கள் தற்போது அரசு அதிகாரிகளாக உள்ளனர்.



வடமாநிலத்தில் மூத்த சகோதர-சகோதரிகளுக்கு ராக்கி கயிறு கட்டி அன்பை வெளிப்படுத்தும் ரக்ஷா பந்தன் பண்டிகை கொண்டாடப்பட்டது.கான் சார் பயிற்சி மையத்தில் படிக்கும் மாணவிகள், சகோதரிகள் மத வேறுபாடின்றி சுமார் 15 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அவரை நேரில் சந்தித்து ராக்கி கயிறு கட்டினர்.

மாணவிகளின் அன்பால் கான் சார் திக்குமுக்காடி பேச்சே இல்லாமல் மகிழ்ச்சியில் திளைத்தார். இதுதொடர்பான வீடியோ காட்சி இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகிறது. ராக்கி குறித்து உணர்ச்சிகரமான வீடியோவை வெளியிட்டு பேசிய ஆசிரியர் கான், தனது மணிக்கட்டில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ராக்கிகள் கட்டப்பட்டுள்ளதாகவும், இதன் எடை காரணமான கையை கூட உயர்த்த முடியவில்லை என்று தெரிவித்தார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



சுதந்திர தின விழாவை முன்னிட்டு சென்னை புனித ஜார்ஜ் கோட்டை முகப்பில் 2-வது ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.



கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சியில் நீர்வளத் துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்திற்கு "சி.சுப்பிரமணியம் வளாகம்" என்று பெயர் சூட்டப்பட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில், பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்டம் தொடங்க முக்கிய காரணமாக இருந்த பெருந்தலைவர் காமராசர், முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.கே. பழனிசாமி மற்றும் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் ஆகியோருக்கு நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலைகளை திறந்து வைத்து, அச்சிலைகளுக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவர்களது திருவுருவப் படங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

# தங்கம் விலை சற்று சரிவு

**சென்னை, ஆக. 12-**

வார தொடக்கநாளான நேற்று தங்கம் விலை குறைந்து விற்பனையானது. கிராமுக்கு 70 ரூபாய் குறைந்து ஒரு கிராம் தங்கம் ரூ.9,375-க்கும், சவரனுக்கு 560 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ரூ.75,000-க்கும் விற்பனையானது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விலை என்ற போக்கில் தங்கம் விலை இருக்கிறது. விலை மாற்றம் இல்லாத நாட்களே இல்லை என்ற வகையில் ஏறுவதும், இறங்குவதுமாக தங்கம் இருந்து வருகிறது.

இந்த நிலையில், வார தொடக்கநாளான நேற்று தங்கம் விலை குறைந்து விற்பனையானது. கிராமுக்கு 70 ரூபாய் குறைந்து ஒரு கிராம் தங்கம் ரூ.9,375-க்கும், சவரனுக்கு 560 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ரூ.75,000-க்கும் விற்பனையானது. வெள்ளி விலையில் மாற்றமில்லை. ஒரு கிராம் வெள்ளி 127 ரூபாய்க்கும், பார் வெள்ளி 1 லட்சத்து 27 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனையானது.

### வரி ஏய்ப்பு செய்வதாக புகார்:

# சிவகாசியில் பட்டாசு தயாரிக்கும் ஆலை, வீடுகளில் வருமான வரித்துறை சோதனை

**விருதுநகர், ஆக. 12-**

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் பட்டாசு தயாரிக்கும் நிறுவனங்களில் அலுவலகங்களில் வருமான வரித்துறையினர் சோதனை மேற்கொண்டனர். சிவகாசியில் பட்டாசு தயாரிக்கும் நிறுவனங்கள் வரி ஏய்ப்பு செய்வதாக வருமானவரித் துறை தகவல் கிடைத்தது. இதை அடுத்து சென்னை மற்றும் மதுரையிலிருந்து வருமானவரித்துறை அதிகாரிகள் 10 குழுக்கள் சிவகாசிக்கு வந்தனர். சிவகாசியில் உள்ள பிரபல பட்டாசு தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் அவர்களின் வீடுகள் பங்குதாரர்கள் வீடுகள் என அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

இந்தச் சோதனை ஏழு பட்டாசு தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் உரிமையாளர்கள் பங்குதாரர்கள் வீடுகளில் சோதனை நடைபெற்றது. காலை 10 மணிக்கு சோதனை தொடங்கியது அதிகாரிகள் அலுவலகத்தின் பிரதான வாசல் கதவுகளை மூடி வெளியே இருந்தும் உள்ளே இருந்தும் யாரும் வர இயலாத வகையில் பூட்டிவிட்டு சோதனை நடத்தினர். இச் சோதனையில் சில நிறுவன அலுவலகம் மற்றும் வீடுகளில் இருந்து ஆவணங்களை அதிகாரிகள் எடுத்துச் சென்றனர். சிவகாசியில் பட்டாசு தயாரிக்கும் நிறுவன அலுவலகங்களில் வருமானவரித்துறையினர் சோதனை நடத்தியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

### 79-வது சுதந்திர தினம்:

# சென்னை விமான நிலையத்தில் போலீசார் தீவிர கண்காணிப்பு

**சென்னை, ஆக. 12-**

79வது சுதந்திர தினத்தையொட்டி, சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். 79வது சுதந்திர தின விழா வரும் 15-ம் தேதி நாடு முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. சுதந்திர தின விழா கொண்டாட்டங்களை சீர்குலைக்க முயற்சி நடைபெறாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்கள், வழிபாட்டு தளங்கள், மக்கள் அதிகமாக கூடும் முக்கியமான ரெயில், பஸ் நிலையங்களில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில், 79வது சுதந்திர தினத்தையொட்டி, சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. தீவிர கண்காணிப்பில் போலீசார் ஈடுபட்டுள்ளனர். உள்நாட்டு பயணிகள் ஒன்றரை மணி நேரமும், சர்வதேச பயணிகள் மூன்றரை மணி நேரமும் முன்னதாக வர அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### தடுப்பு வேலியைத் தாண்டி குதித்து

# அகிலேஷ் யாதவ் போராட்டம்

**டெல்லி, ஆக. 12-**

போலீசார் தடுப்புகள் வைத்து தடுத்து நிறுத்தியதால் சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் போலீஸ் தடுப்பு வேலியைத் தாண்டி குதித்து போராட்டத்தில் ஈடுபட்ட அகிலேஷ் யாதவை போலீசார் கைது செய்தனர்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் காந்தி சமீபத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், கர்நாடகாவில் உள்ள ஒரு தொகுதியில் வாக்காளர் பட்டியலில் நடைபெற்ற முறைகேடுகளை வெளியிட்டு, அதற்கான ஆதாரங்களையும் குறிப்பிட்டார். பா.ஜ.க.வும், தேர்தல் ஆணையமும் கூட்டு சேர்ந்து இது போன்ற பெரிய மோசடியில் ஈடுபட்டுள்ளன என தெரிவித்தார். இதையடுத்து, டெல்லியில் கடந்த வாரம் செய்தியாளர்கள் சந்திப்பின்போது, கர்நாடகத்தில் ஒரு பெண் வாக்காளர் 2 முறை வாக்கு செலுத்தியிருப்பதாக ராகுல் காந்தி பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இந்நிலையில், வாக்காளர் பட்டியல் முறைகேட்டை கண்டித்து ராகுல் காந்தி தலைமையில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பேரணி நடத்தினர். பாராளுமன்ற வளாகத்தில் இருந்து தேர்தல் ஆணையம் வரை எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பேரணியாக சென்றனர்.

பாராளுமன்ற வளாகத்தில் இருந்து தேர்தல் ஆணையம் நோக்கிச் சென்றவர்களை இரும்பு தடுப்பு வேலிகள் கொண்டு போலீசார் தடுத்து நிறுத்தினர். இந்நிலையில், போலீசார் தடுப்புகள் வைத்து தடுத்து நிறுத்தியதால் சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ் போலீஸ் தடுப்பு வேலியைத் தாண்டி குதித்து போராட்டத்தில் ஈடுபட்டார். இதனையடுத்து அகிலேஷ் யாதவை போலீசார் கைது செய்தனர்.

### தலா 25 மாடிகளுடன்

# டெல்லியில் நான்கு இடங்களில் எம்.பி.க்களுக்கு குடியிருப்புகள்

## பிரதமர் நரேந்திரமோடி திறந்து வைத்தார்



**புதுடெல்லி, ஆக. 12-**

டெல்லியில் 4 இடங்களில் தலா 25 மாடிகளுடன் 184 எம்.பிக்களுக்கு குடியிருப்புகளை பிரதமர் மோடி நேற்று திறந்து வைத்தார்.

மாநிலங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் எம்.பி.க்கள் பாராளுமன்ற கூட்டங்களில் கலந்து கொள்ள டெல்லி செல்லும்போது தங்குவதற்கு மத்திய அரசு வீடு ஒதுக்கீடு செய்து கொடுப்பது வழக்கத்தில் உள்ளது. தற்போது பாராளுமன்ற எம்.பி.க்களுக்காக டெல்லி பாபா கரன்சிங் மார்க் பகுதியில் பிரமாண்டமான அடுக்கு மாடி குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது.

4 இடங்களில் தலா 25 மாடிகளுடன் அந்த அடுக்குமாடி குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதில் 184 எம்.பி.க்களுக்கு வீடு ஒதுக்கீடு செய்ய வசதி செய்யப்பட்டு இருக்கிறது. இந்த அடுக்குமாடி குடியிருப்புகளை பிரதமர் மோடி நேற்று திறந்து வைத்தார்.

இந்த புதிய வீடுகள் ஒவ்வொன்றும் சுமார் 5 ஆயிரம் சதுர அடி பரப்பளவு கொண்டது. ஒவ்வொரு வீட்டிலும் 5 படுக்கை அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. டைனிங் அறை, விருந்தினர் அறை, விருந்தினர் தங்கும் அறை, வரவேற்பு அறை என்று விசாலமாக இந்த வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

இது தவிர அந்த வீட்டில் எம்.பி.க்கள் தங்களது அலுவலகத்தை அமைத்துக் கொள்ளவும் ஒரு பெரிய அறை கட்டப்பட்டுள்ளது. இவ்வளவு வசதிகள் இருப்பதால் இந்த குடியிருப்பில் வீடுகளை பெற எம்.பி.க்கள் இடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. இந்த அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் 500 வாகனங்கள் நிறுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

# சென்னையில் ரூ.233 கோடி மதிப்பில் 135 புதிய ஏ.சி.மின்சார பேருந்துகள்

## துணைமுதல்வர் உதயநிதி துவக்கி வைத்தார்

**சென்னை, ஆக. 12-**

ரூ. 49.56 கோடி மதிப்பீட்டில்மேம்படுத்தப்பட்ட பெரும்பாக்கம் மின்சாரப் பேருந்து பணிமனையைத் திறந்துவைத்து, 233 கோடி ரூபாய் மதிப்பிலான 55 புதிய தாழ்தள மின்சார குளிர்சாதன பேருந்துகள் மற்றும் 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை துணை முதலமைச்சர் உதயநிதி கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

கடந்த ஜூன் , 30.ம்தேதி முதலமைச்சர் ஸ்டாலின் முதற்கட்டமாக வியாசர்பாடி மின்சாரப் பேருந்து பணிமனையை, திறந்து வைத்து,120 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகளின் இயக்கத்தை பொதுமக்களின்பயன்பாட்டிற்காக கொடி அசைத்து, தொடங்கி வைத்தார். 2-ம் கட்டமாக துணை முதலமைச்சர்உதயநிதி ஸ்டாலின், 49.56 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மாநகர்போக்குவரத்துக் கழகத்தின் பெரும்பாக்கம் மின்சாரப் பேருந்து பணிமனையைத்திறந்து வைத்து, 233 கோடி ரூபாய் மதிப்பிலான 55 புதிய தாழ்தள மின்சாரகுளிர்சாதனப் பேருந்து மற்றும் 80 புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் என மொத்தம் 135 பேருந்துகளின் இயக்கத்தை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

மீதமுள்ள பூவிருந்தவல்லி, மத்திய பணிமனை மற்றும் தண்டையார்பேட்டை-1 ஆகிய மூன்று பணிமனைகளிலும், உரிய கட்டட உட்கட்டமைப்பு மற்றும் மின்னேற்றம் செய்வதற்குரிய கட்டுமானப்பணிகள் மற்றும் புதிய தாழ்தள மின்சாரப் பேருந்துகள் இயக்குவதற்கு தேவையான பராமரிப்பு கூடம், அலுவலக நிர்வாகக் கட்டடம், பணியாளர்கள்ஓய்வறை ஆகியவை புதுப்பிக்கப்பட்டு,

புதிய மின்மாற்றிகள் பொருத்துதல் மற்றும்தீயணைக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் நிறுவுதல் உள்ளிட்ட பணிகள்நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் .கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையதிலிருந்து (KCBT) -திருவான்மியூர் செல்லும் 95 எஸ் வழித்தடத்தில் 10 டீலக்ஸ், 5 ஏ.சி பேருந்துகள்,கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையதிலிருந்து –சோழிங்கநல்லூர் செல்லும் 555S வழித்தடத்தில் 5 டீலக்ஸ், 5 ஏ.சி பேருந்துகள், தியாகராய நகரிலிருந்து – திருப்போரூர் செல்லும் 19 வழித்தடத்தில் 5 டீலக்ஸ், 5ஏ.சி பேருந்துகள், பிராட்வேயிலிருந்து மெரினா கடற்கரை வழியாக – கேளம்பாக்கம்செல்லும் 102 வழித்தடத்தில் 5 டீலக்ஸ், 5 ஏ.சி பேருந்துகள், சென்னை விமானநிலையத்தில் இருந்து - சிறுசேரி ஐ.டி.பூங்கா செல்லும் எம்.ஏ-ஏ.2 வழித்தடத்தில் 15 ஏ.சிபேருந்துகள், எம்.ஜி.ஆர். கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து - கேளம்பாக்கம்/சிறுசேரி ஐ.டி.பூங்கா செல்லும் 570 வழித்தடத்தில் 5 டீலக்ஸ், 20 ஏ.சி பேருந்துகள் இயக்கத்தை துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்தார்.

மேலும், திருவான்மியூரிலிருந்து - சிறுசேரி ஐ.டி. பூங்கா செல்லும் 102Eவழித்தடத்தில் 5 டீலக்ஸ் பேருந்துகள், அடையாறு பேருந்துநிலையத்திலிருந்து –தாம்பரம் செல்லும் 99 வழித்தடத்தில் 5 டீலக்ஸ் பேருந்துகள், பிராட்வேயிலிருந்து -பெரும்பாக்கம் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிகுடியிருப்புக்கு செல்லும் 102P வழித்தடத்தில் 10 டீலக்ஸ் பேருந்துகள், தியாகராயநகரிலிருந்து பெரும்பாக்கம் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியஅடுக்கு மாடி குடியிருப்புக்கு செல்லும் 19AX வழித்தடத்தில் 10 டீலக்ஸ்பேருந்துகள், தாம்பரம் மேற்கு முதல் – சோழிங்கநல்லூர் செல்லும் 99A வழித்தடத்தில் 10 டீலக்ஸ் பேருந்துகள், கிண்டி திரு. வி.க. எஸ்டேட்டிலிருந்துபெரும்பாக்கம் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிகுடியிருப்புக்கு செல்லும் 119G வழித்தடத்தில் 10 டீலக்ஸ் பேருந்துகள் எனமொத்தம் 80 டீலக்ஸ் பேருந்துகள் மற்றும் 55 குளிர்சாதன பேருந்துகள் எனமொத்தம் 135 பேருந்துகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழியனுப்பிவைத்தார்.



அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி அவரது இல்லத்தில் சேலம் புறநகர் தொகுதிக்கு உட்பட்ட அரசு பள்ளிகளில் படித்து, நீட் தேர்வில் 7.5 சதவீத உள் இடஒதுக்கீட்டினை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக, மாணவ- மாணவிகள் நன்றியினை தெரிவித்து, வாழ்த்து பெற்றனர்.

### சோழிங்கநல்லூர், திருப்போரூரில்

# ஆக. 23-ம் தேதி இ.பி.எஸ்-ன் சுற்றுப்பயணம் ஒத்திவைப்பு

**சென்னை, ஆக. 12-**

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக சட்டசபை எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி 23.8.2025 – சனிக்கிழமை அன்று சோழிங்கநல்லூர், திருப்போரூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் மேற்கொள்ள இருந்த சுற்றுப்பயணத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அ.தி.மு.க. தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் `மக்களைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம்' என்ற உன்னத நோக்கத்தை லட்சியமாகக் கொண்டு, கடந்த 7.7.2025 முதல் சட்டமன்றத் தொகுதி வாரியாக தொடர் பிரச்சார சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில், கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி மு. பழனிசாமி அவர்கள், 23.8.2025 வரை தொடர் பிரசாரம் செய்திடும் வகையில் அறிவிக்கப்பட்டிருந்த, புரட்சித் தமிழரின் எழுச்சிப் பயண மூன்றாம் கட்ட சுற்றுப் பயணத் திட்டத்தில், 23.8.2025 – சனிக்கிழமை அன்று சோழிங்கநல்லூர், திருப்போரூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் மேற்கொள்ள இருந்த சுற்றுப் பயணத் திட்டம் ஒத்திவைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியா சிந்து நதியின் குறுக்கே அணை கட்டினால் தகர்ப்போம்

## பாகிஸ்தான் ராணுவ தளபதி மிரட்டல்

**வாஷிங்டன், ஆக. 12-**

சிந்து நதியில் இந்தியா அணை கட்டினால் தகர்ப்போம் என்று பாக்கிஸ்தான் ராணுவ தளபதி பேசினார்.


அமெரிக்காவிற்கு சுற்றுப் பயணம் சென்றுள்ள பாகிஸ்தான் ராணுவ தளபதி ஆசிம் முனீர் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது: சிந்து நதியின் குறுக்கே இந்தியா அணை கட்டட்டும் என்றுதான் நாங்கள் காத்திருக்கிறோம். அணை கட்டினால், 10 ஏவுகணைகளால் அதை அழிப்போம். சிந்து நதி இந்தியர்களின் குடும்ப சொத்து அல்ல. எங்களிடம் ஆயுதப் பற்றாக்குறை ஏதுமில்லை என்றார். மேலும், எதிர்காலத்தில் 'இந்தியாவிடமிருந்து அச்சுறுத்தல் உலகின் பாதி நாடுகளை அழித்துவிடுவோம் என்ற தொனியிலும் பாகிஸ்தான் ராணுவ தளபதி பேசியுள்ளார். ஏற்கனவே வரி விதிப்பால் இந்தியா - அமெரிக்கா இடையே பதற்றமான சூழல் நிலவி வரும் சூழலில் அமெரிக்க மண்ணில் இருந்தவாறு இந்தியாவுக்கு பாகிஸ்தான் தளபதி மிரட்டல் விடுத்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. பஹல்காம் பயங்கரவாத தாக்குதலையடுத்து, பாகிஸ்தானுக்கு தக்க பாடம் புகட்ட முடிவு செய்த இந்தியா, அந்த நாட்டுடனான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக அறிவித்தது. இதனால் அரண்டு போன பாகிஸ்தான் இந்தியாவுக்கு ஏதிராக ஆத்திரமூட்டும் வகையில் கருத்துகளை கூறி வருவது குறிப்பிடத்தக்கது.

### உளுந்தூர்பேட்டை அருகே அதிசயம்:

# மனித முக தோற்றத்துடன் பிறந்த ஆட்டுக்குட்டி..!

**கள்ளக்குறிச்சி, ஆக. 12-**

உளுந்தூர் போட்டை அருகே மனித முக தோற்றத்துடன் பிறந்த ஆட்டுக்குட்டி பொதுமக்கள் பீதி.



கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அடுத்துள்ள சேந்தமங்கலம் கிராமத்தில் வசித்து வருபவர் ஆனந்தன் (வயது 38). இவர் தனது வீட்டில் 20 ஆடுகளுக்கு மேல் வளர்த்து வருகிறார். இந்த நிலையில் இவர் வளர்த்து வந்த ஆடுகளில் ஒன்று நேற்று 2 குட்டிகளை ஈன்றது. அதில் ஒரு குட்டி சாதாரண ஆட்டு குட்டியை போல் இருந்தது. ஆனால் 2-வதாக ஈன்ற குட்டி மனித முக தோற்றத்துடன் வித்தியாசமான தோற்றத்தில் இறந்து பிறந்தது. இதை அறிந்த கிராம மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து இறந்து பிறந்த ஆட்டுக்குட்டியை வியப்புடனும், ஆச்சரியத்துடனும் பார்த்து சென்றனர். மேலும் ஆடு இது போன்று வினோத உருவத்தில் குட்டியை ஈன்றதால் ஏதேனும் அசம்பாவிதம் நடக்கும் என பீதியை கிளப்பியதால் அந்த கிராம மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

# 24-ம் தேதி சபாநாயகர்கள் மாநாடு: அமித்ஷா தொடங்கி வைக்கிறார்

**புதுடெல்லி, ஆக. 12-**

டெல்லியில் வருகிற 24-ம் தேதி சபாநாயகர் மாநாட்டை மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா தொடங்கி வைக்கிறார்.

வருகிற 24-ம் தேதி டெல்லி சட்டப்பேரவையில் அகில இந்திய சபாநாயகர்கள் மாநாட்டை மத்திய உள்துறை மந்திரி அமித் ஷா தொடங்கி வைப்பார் என்று டெல்லி சபாநாயகர் விஜேந்தர் குப்தா கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

32 சபாநாயகர்கள் மற்றும் துணை சபாநாயகர்கள், மேலவை, கீழவை தலைவர்கள், துணைத்தலைவர்கள் என இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதாக உறுதி அளித்துள்ளனர். இந்தியாவில் இது போன்ற ஒரு நிகழ்வு நடப்பது இதுவே முதல்முறை. வருகிற 24-ம் தேதி தொடக்க அமர்வு நடைபெறும். இந்த மாநாட்டை மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தொடங்கி வைக்கிறார். நிறைவு விழா 25-ம் தேதி நடைபெறும். மக்களவை சபாநாயகர் ஓம்.பிர்லா சிறப்பு விருந்தினராக கலந்து கொள்வார். இவ்வாறு அவர் கூறினார்.

இந்தமாநாட்டில் டெல்லி எம்.பி.க்கள், முதல்-மந்திரி ரேகா குப்தா, கேபினட் மந்திரிகள் மற்றும் எம்.எல்.ஏ.க்களும் பங்கேற்பார்கள் என்று கூறப்படுகிறது.

### டெல்லியில் ராகுல் காந்தி உள்ளிட்ட

# எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைது: த.வெ.க. தலைவர் விஜய் கண்டனம்

**சென்னை, ஆக. 12-**

டெல்லியில் நேற்று பாராளுமன்ற வளாகத்தில் இருந்து தலைமைத் தேர்தல் ஆணையம் நோக்கி மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் ஊர்வலமாகச் சென்ற பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டது கடும் கண்டனத்திற்குரியது.

த.வெ.க. தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- சுதந்திரமான மற்றும் நியாயமானத் தேர்தலை வலியுறுத்தியும், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் டெல்லியில் நேற்று பாராளுமன்ற வளாகத்தில் இருந்து தலைமைத் தேர்தல் ஆணையம் நோக்கி மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் ஊர்வலமாகச் சென்ற பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டது கடும் கண்டனத்திற்குரியது.

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற "எல்லோருக்குமான தலைவர் அம்பேத்கர்" புத்தக வெளியீட்டு விழாவில் பேசியபோது, "நம் நாடு முழு வளர்ச்சியை அடைய வேண்டும் என்றால் ஜனநாயகம் காக்கப்பட வேண்டும். அப்படி ஜனநாயகம் காக்கப்பட வேண்டும் என்றால் அரசியலமைப்புச் சட்டம் காக்கப்பட வேண்டும். அதற்கான பொறுப்பும் கடமையும் நம் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும். ஜனநாயகத்தின் ஆணிவேர் சுதந்திரமான மற்றும் நியாயமானத் தேர்தல் என்று அப்பொழுதே ஆணித்தரமாகத் தெரிவித்திருந்தோம். அத்தோடு, தேர்தல் ஆணையர்கள் ஒருமித்த கருத்தோடு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தோம்.

மேலும், பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்தம் நடைபெற உள்ளதாகத் தகவல் வெளியானதும், அந்த நடைமுறையானது ஜனநாயக உரிமைகளைக் கேள்விக்குறியாக்கும் என்று, தமிழ்நாட்டில் இருந்து தமிழக வெற்றிக் கழகம்தான் முதன்முதலாகக் குரல் எழுப்பியது. ஏற்கெனவே நாம் கூறியது போல, அனைவருக்கும் நம்பிக்கை ஏற்படும் விதமாக, ஜனநாயகத்தைக் காக்கும் வகையில் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தல் நடைபெறுவது உறுதி செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



ஜெயலலிதா ஒரு சாதனைப்பெண்மணி, இரும்புப்பெண்மணி. ஜெயலலிதா இடத்தை வேறு யாரும் நிரப்ப முடியாது. ஒரு எம்.ஜி.ஆர், ஒரு ஜெயலலிதாதான். தமிழ்நாட்டில் பல சவால்களை சந்தித்த ஜெயலலிதா என் ரோல் மாடல் என கூறியிருக்கிறேன். கேப்டனை மானசீக குரு என சொல்பவர்கள் அவரது படத்தை புகைப்படத்தை பயன்படுத்தலாம்.

**- பிரேமலதா**



நாம் தமிழர் கட்சியை ஏதேனும் ஒரு கூட்டணியில் சேர்க்க வாக்குகள் குறையும் என வதந்தி பரப்புகிறார்கள். விஜய் வருகையால் எங்களுக்கு வாக்குகள் குறையும் என தவறான தகவல்களை பரப்புகிறார்கள். 2026 சட்டசபை தேர்தலில் நா.த.க. தனித்து போட்டியிடும். தேர்தலில் தோற்று செத்து சாம்பல் ஆனாலும் நாம் தமிழர் கட்சி தனித்தே போட்டியிடும்.

**- சீமான்**



1960-ல் வாக்காளர் பதிவு விதிகள் 20(3)(பி) கீழ் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கான உரிமைக் கோரலை ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது குறித்த வழக்குக்கு மட்டுமே இது பொருந்தும். தேர்தல் ஆணையம் நாட்டில் தேர்தல் நடத்துவதற்கான ஒரு சுதந்திரமான அமைப்பு மட்டும்தான். மாறாக கேள்வி கேட்பதற்கு அது கோர்ட் அல்ல.

**- ப.சிதம்பரம்**



ஜெகதீப் தன்கர் அவருடைய இல்லத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர் பாதுகாப்பாக இல்லை என்றும் டெல்லியில் வதந்திகள் பரவி வருகின்றன.முன்னாள் துணை ஜனாதிபதிக்கு என்ன நடந்தது? அவர் எங்கே? அவர் பாதுகாப்பாக இருக்கிறாரா? இந்தக் கேள்விகள் பற்றிய உண்மையை நாடு அறிய உரிமை உள்ளது.

**- சஞ்சய் ராவத்**

# திருச்சி எம்.ஐ.இ.டி பொறியியல் கல்லூரியில் போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு உறுதிமொழி

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி முன்னிலையில் எடுத்துக்கொண்டனர்



**திருச்சி,ஆக.12-**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் (11.08.2025) சென்னை, நந்தனம் அரசு கலைக் கல்லூரி வளாகத்திலிருந்து காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி காணொளி வாயிலாக அனைத்து மாவட்டங்களிலும் ஒளிபரப்பு செய்யப்பட்டு உறுதிமொழி எற்றுக்கொண்டதைத் தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் வட்டம், குண்டூர், எம்.ஐ.இ.டி பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற விழா நிகழ்வில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ; முன்னிலையில் மாணவ, மாணவிகள் பங்கேற்று போதை பொருள் எதிர்ப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 'போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" என்ற நிலையினை உருவாக்கும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் போதை பொருட்களின் தீய விளைவுகள் குறித்து பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள், பேரணிகள் போன்றவை நடத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக "மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மற்றும் விருதுகள் வழங்கும் நிகழ்வானது தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வு மாநில அளவில் காணொளி காட்சி வாயிலாக அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்றது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் எம்.ஐ.இ.டி பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற விழா நிகழ்வில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ; கலந்து கொண்டு மாணவ, மாணவிகளுடன் உறுதி மொழி ஏற்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் போதை பொருள் தடுப்பு விழிப்புணர்வு தொடர்பாக நடைபெற்ற கட்டுரை போட்டி, பேச்சுப்போட்டி, ஓவியப் போட்டி, நாடகம், பாட்டுப்போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் களுக்கு பாராட்டுச் சான்றிதழ் களை வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்வில், கலெக்டர் வே.சரவணன், மாநகர காவல் ஆணையர் காமினி,இ.கா.ப., , உதவி ஆணையர் (கலால்) உதயகுமார், மண்டல தலைவர் மதிவாணன், கல்லூரி ஆசிரிய பெருமக்கள், மாணவ, மாணவிகள், அரசு அலுவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் தேசிய குடற்புழு நீக்க மருந்து வழங்கும் முகாம்

## அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்



**புதுக்கோட்டை,ஆக.12-**

புதுக்கோட்டை மாவட்டம், மாநகராட்சி, பிரகதாம்பாள் அரசினர் மேல்நிலைப் பள்ளியில், தேசிய குடற்புழு நீக்க மருந்து வழங்கும் முகாமினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கலெக்டர் மு.அருணா, தலைமையில் (11.08.2025) துவக்கி வைத்து, மாணாக்கர்களுக்கு மாத்திரைகளை வழங்கினார்.

பின்னர், இயற்கை வளங்கள் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள், மாணாக்கர்கள் நோயில்லா நல்வாழ்வு வாழ்ந்திடும் வகையில் பல்வேறு மருத்துவம் சார்ந்த திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், தேசிய குடற்புழு நீக்க நாள் ஒவ்வொரு ஆண்டும் இரு சுற்றுக்களாக நாடு முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது.

தேசிய குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் தினம் ஒவ்வொரு ஆண்டும் இரு சுற்றுக்களாக நாடு முழுவதும் கடை பி டிக் க ப் ப டு கி றது. அதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான முதல் சுற்று 11.08.2025 மற்றும் 18.08.2025 அன்று தமிழ்நாடு முழுவதும் தேசிய குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் 1 முதல் 19 வயதுடைய 4,39,271 குழந்தைகளுக்கும், 20 முதல் 30 வயதுடைய 1,08,622 மகளிருக்கும் என மொத்தம் 5,47,893 நபர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்படவுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகள், அரசு, தனியார் கல்லூரிகளில், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், சுகாதார செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவ அலுவலர்கள் ஆகியோர் மேற்பார்வையில் குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்பட உள்ளது. பள்ளி செல்லாத சிறார்களுக்கும், 20 வயது முதல் 30 வயதுடைய மகளிருக்கும் (கர்ப்பிணிகள், பிரசவித்த தாய்மார்கள் நீங்கலாக) அங்கன்வாடி மையங்கள், துணை சுகாதார நிலையங்களில் குடற்புழு நீக்க அல்பென்டசோல் மாத்திரை வழங்கப்பட உள்ளது.

இன்றையதினம் குடற்புழு நீக்க மாத்திரை வழங்காமல் விடுபட்டோருக்கு 18.08.2025 ஆம் தேதி வழங்கப்பட உள்ளது. 2 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு அரை மாத்திரையும் (200 மி.கி), 2 முதல் 19 வயது உள்ள குழந்தைகள் மற்றும் 20-30 வயது வரை உள்ள மகளிருக்கு ஒரு மாத்திரையும் (400 மி.கி) வழங்கப்படும்.

எனவே, குடற்புழு நீக்க மாத்திரைகளை உட்கொள்வதன் மூலம் இரத்த சோகை சரி செய்யப்பட்டு குழந்தையின் ஊட்டச்சத்து நிலையில் முன்னேற்றம் உருவாகிறது. மேலும், குழந்தைகளின் வளர்ச்சியும், ஆரோக்கியமும் மேம்பாடு அடைந்து, பள்ளி வருகையில் முன்னேற்றமும் இருக்கும் என்பதால் இவ்வாய்ப்பினை தகுதியுடைய அனைவரும் பயன்படுத்தி இந்த மாத்திரையினை உட்கொண்டு நல்ல உடல் ஆரோக்கியத்தினை பெற்றிட வேண்டும் எனவும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

முன்னதாக, 'குடற்புழு தொற்றை குறைத்து வளமான எதிர்காலத்திற்கு வித்திடுவோம்" தேசிய குடற்புழு நீக்க நாள் உறுதிமொழியான, 'வருடத்திற்கு இருமுறை குடற்புழு நீக்க மாத்திரை உட்கொள்வதன் மூலம் உருண்டைப்புழு, சாட்டைப்புழு, கொக்கிப்புழு தொற்றினை ஒழிக்க முடியும் என்று அறிவேன். குடற்புழு நீக்க மாத்திரை உட்கொள்வதால் உடல் வளர்ச்சி, அறிவு திறன், நோய் தொற்றிற்கான எதிர்ப்பு சக்தி ஆகியவை அதிகரிக்கும் என்பதையும் நன்கு அறிவேன். நானும், எனது சுற்றத்தினரும் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்போம் என்றும், சுகாதார கழிவறையை பயன்படுத்துவோம் என்றும், சாப்பிடும் முன்னும், பின்னும் கைகளை சோப்பு போட்டு சுத்தமாக கழுவுவோம் என்றும், திறந்தவெளியில் மலம் கழிப்பதை தவிர்ப்போம் என்றும் உறுதி கூறுகிறேன். குடற்புழு நீக்க மாத்திரை உட்கொள்வதன் மூலம், குடற்புழு தொற்றில்லா, இரத்த சோகை இல்லா தமிழ்நாடு உருவாக ஒத்துழைப்பேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்" என்ற உறுதிமொழியினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, கலெக்டர் மு.அருணா, தலைமையில் வாசிக்க அதனை பின்தொடர்ந்து மாணாக்கர்கள் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றுக் கொண்டனர். இந்நிகழ்வுகளில், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் , புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை. முத்துராஜா , மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ் வர் யா, மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு.ராம்கணேஷ் (புதுக்கோட்டை), மரு.விஜயகுமார் (அறந்தாங்கி), முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம், புதுக்கோட்டை மாநகர் நல அலுவலர் மரு.காயத்ரி, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர். சாலை செந்தில், தொழிலாளர் நலவாரிய உறுப்பினர் பெ.தெய்வானை, புதுக்கோட்டை வட்டாட்சியர் மு.செந்தில்நாயகி மற்றும் ராஜேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

## மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடைபெற்றது

**தஞ்சாவூர்,ஆக.12-**

தஞ்சாவூர் மாவட்டம் கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் தலைமையில் (11.08.2025) நடைபெற்றது. இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, குடும்ப அட்டை, பட்டா மாற்றம், கல்விக் கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 387 மனுக்களை பொதுமக்கள் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களிடம் வழங்கினார்கள். இம்மனுக்கள் மீது

உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் உத்தரவிட்டார்கள். இக்கூட்டத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ரவிச்சந்திரன் , பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் ஸ்ரீதர் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருமருகல் அருகே மழைமாரியம்மன் கோயிலில் திருவிளக்கு பூஜை



**நாகப்பட்டினம்,ஆக.12-**

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் அகரக்கொந்தகை ஊராட்சி வாழ்மங்கலம் கிராமத்தில் மழை மாரியம்மன் கோயில் அமைந்துள்ளது.

இந்த கோயிலில் ஆண்டு தோறும் ஆடி மாதம் திருவிளக்கு பூஜை நடைபெறுவது வழக்கம். அதன்படி ஞாயிற்றுகிழமை திருவிளக்கு பூஜை நடைபெற்றது.

முன்னதாக அம்மனுக்கு மஞ்சள் பொடி, மாப்பொடி, பால், தயிர், பன்னீர், இளநீர், தேன், திரவியப்பொடி உள்ளிட்ட பொருட்களால் சிறப்பு அபிஷேகமும், ஆராதனையும் நடைபெற்றது. அதனை தொடர்ந்து அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். பின்னர் கோயில் வளாகத்தில் உலக நன்மை வேண்டி திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இதில் சுமங்கலி பெண்கள் மற்றும் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு திருவிளக்கு ஏற்றி அம்மனை வழிபட்டனர். தொடர்ந்து இரவு அன்ன வாகனத்தில் அம்மன் வீதியுலா நிகழ்ச்சியும் நடைபெற்றது.இதில் திரளான பக்தர்கள் கலந்துக் கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கோயில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# திருவாரூர் விஜயபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரை




**திருவாரூர்,ஆக.12-**

திருவாரூர் நகரம் விஜயபுரம் நகராட்சி நடுநிலைப் பள்ளியில் மாவட்ட சுகாதார அலுவலர் சங்கீதா தலைமையில் மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்பட்டது.தேசிய குடற்புழு நீக்க நாளை முன்னிட்டு ஆறு மாதத்திற்கு ஒரு முறை நடைபெறுகிறது.இதில் 0 முதல் -19வயதுக்கு உட்பட்ட அனைவருக்கும் ஆல்பண்டசோல் மாத்திரை வழங்கப்படுகிறது.இதன் மூலம் கொக்கி புழு,நாடா புழு,உருளை புழு ஆகியவற்றில் இருந்து நோய் உருவாக இருப்பதை தடுக்கப்படுகிறது.இந்நிகழ்ச்சியில் திருவாரூர் நகரமன்ற தலைவர் புவனபிரியா செந்தில்,ஆணையர் சுரேந்திரஷா,நகர மன்ற உறுப்பினர்கள் வாரை.பிரகாஷ்,அன்வர்,வட்டார மருத்துவ அலுவலர் ஜெயப்பிரகாஷ் நாராயணன்,நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் கிருத்திகா,பள்ளி தலைமை ஆசிரியர் முத்துலட்சுமி,மருந்தாளுநர் ரமேஷ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்வின் முக்கிய நிகழ்வாக அனைவரும் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்

# திருவாரூர் மாவட்டத்தில் போதை பொருட்களுக்கு எதிரான உறுதிமொழி ஏற்பு

## கலெக்டர், எம்.எல்.ஏ. பங்கேற்பு



**திருவாரூர்,ஆக.12-**

"போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு விழா மற்றும் விருதுகள் வழங்கும் விழா தமிழ்நாடு துணை முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக உறுதிமொழி ஏற்பு நடைபெற்றதை தொடர்ந்து திருவாரூர் மாவட்டம் குடவாசல் வட்டம் மஞ்சக்குடி சுவாமி தயானந்தா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருவாரூர் கலெக்டர் வ.மோகனச் சந்திரன், அவர்களும், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.க லை வா ணன் அவர்களும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யு.கருண்கரட், இ.கா.ப., ; பார்வையிட்டு திருவாரூர் மாவட்டத்தில் போதைப் பொருள்கள் எதிராக சிறப்பாக செயல்பட்ட பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு நற்சான்றிதழ்கள் மற்றும் பரிசுத்தொகைக்கான காசோலைகளை வழங்கினார்கள். மாணவ பருவத்திலேயே போதைப் பழக்கத்தின் தீய விளைவுகளை முழுமையாக அறிந்துகொண்டு போதைப் பழகத்திற்கு எவ்வித காலத்திலும் பழகாமல் இருத்தல் வேண்டும். மாணவ, மாணவியர்களின் நலனுக்காக போதைப்பொருட்கள் ஒழிப்புக்குறித்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தமிழக அரசால் நடத்தப்படுகிறது.

தொடர்ந்து, திருவாரூர் மாவட்டத்தில் 2024-2025 ஆண்டிற்க்கான போதைப்பொருட்களுக்கு எதிராக சிறப்பாக செயல்பட்ட பள்ளிஃ கல்லூரியில் செயல்படும் எதிர்ப்பு மன்றங்கள், தன்னார்வ குழுக்களுக்கு நற்சான்றிதழ்கள் மற்றும் பரிசுத்தொகைக்கான காசோலையினை திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், , திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யு.கருண்கரட், இ.கா.ப., ஆகியோர் வழங்கினார்கள்.

முன்னதாக திருவாரூர் மாவட்ட காவல்த்துறையின் சார்பாக ளுயுலு Nழு வுழு னுசுருபுளு என்ற குறும்படம் திரையிடப்பட்டது. இந்நிகழ்வில், திருவாரூர் வருவாய் கோட்டாட்சியர் சௌமியா, முதன்மை கல்வி அலுவலர் (பொறுப்பு) சௌந்தரராஜன், உதவி ஆணையர் ரவிச்சந்திரன், மஞ்சக்குடி சுவாமி தயானந்தா சரஸ்வதி கல்லூரி தாளாளர் சீனிவாசன், கல்லூரி முதல்வர் டாக்டர்.ஹேமா, குடவாசல் வட்டாட்சியர் இளங்கோவன், மற்றும் காவல்துறை அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், கல்லூரி மாணவ மாணவியர்கள், மகளிர் சுய உதவி குழுக்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை சாய் விளையாட்டு மைதானத்தில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைபட கண்காட்சி



**மயிலாடுதுறை,ஆக.12-**

மயிலாடுதுறை ராஜன் தோட்டத்தில் உள்ள சாய் விளையாட்டு மைதானத்தில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியை ஏராளமான விளையாட்டு வீரர்கள் பார்வையிட்டனர். இப்புகைப்பட கண்காட்சியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைத்த புதிய திட்டங்கள் மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியது குறித்த புகைப்படங்கள் அமைக்கப்பட்டிருந்தது. மேலும், தமிழ்நாடு அரசின் பல்வேறு சிறப்பு திட்டங்களான, மக்களைத் தேடி மருத்துவம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம், உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டம், மக்களுடன் முதல்வர் திட்டம், உங்களுடன் ஸ்டாலின், இல்லம் தேடிக் கல்வி, கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாம், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம், முதலமைச்சரின் ஊட்டம் தரும் காய்கறித்தோட்டம் மற்றும் மாடித் தோட்டம் அமைக்க காய்கறி விதைகள் வழங்குதல், விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்குதல், விவசாயிகளுக்கு 1 இலட்சம் மின் இணைப்பு வழங்கும் திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், புதுமைப் பெண் திட்டம், மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், பள்ளி மாணவர்களுக்கு வானவில் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு தொழில் சார் கடனுதவிகள் வழங்குதல், மீண்டும் மஞ்சப்பை, புதிய தொழில் புரிந்துணர்வு ஒப்பந்தம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் புகைப்படங்கள், மேலும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மற்றும் பிற துறை அமைச்சர் பெருமக்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் மற்றும் கலெக்டர் நலத்திட்ட உதவிகள் வழங்கிய புகைப்படங்கள் உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் இடம் பெற்றிருந்தது. இப்புகைப்படக் கண்காட்சியை ஏராளமான விளையாட்டு வீரர்கள், பார்வையிட்டனர்.

# தேசிய குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் நிகழ்ச்சி

## கலெக்டர், எம்.எல்.ஏ துவக்கி வைத்தனர்



**பெரம்பலூர்,ஆக.12-**

பெரம்பலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில், தேசிய குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் நிகழ்வில் கலெக்டர் ச.அருண்ராஜ் , பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலையில் தேசிய குடற்புழு நீக்க மாத்திரையின் பயன்குறித்தும், பயன்படுத்துவதின் முக்கியத்துவம் குறித்துமான உறுதிமொழியினை வாசிக்க, பள்ளி மாணவ,மாணவியர்கள் (11.08.2025) உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

அ த னைத் தொ டர்ந்து, கலெக்டர் மற்றும் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் பள்ளி மாணவ,மாணவியர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரை வழங்கி முகாமினை தொடங்கி வைத்தனர்.

கலெக்டர் தெரிவித்ததாவது:

பெரம்பலூர் மாவட்டத்தில் குடற்புழு நீக்க மாத்திரை வழங்கும் சிறப்பு முகாம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இச்சிறப்பு முகாமில் 1 முதல் 19 வயதிலான குழந்தைகள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கும் மற்றும் 20 முதல் 30 வயதிலான அனைத்து பெண்களுக்கும் (கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் தவிர்த்து) குடற்புழு நீக்க மாத்திரை (அல்பெண்டசோல்) வழங்கப்பட உள்ளது. மேலும் 1 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அங்கன்வாடி மையங்களிலும், 6 முதல் 19 வயது வரையுள்ள மாணவ மாணவிகளுக்கு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்பட உள்ளது. பள்ளிக்கு செல்லாத குழந்தைகளுக்கு கிராம சுகாதார செவிலியரும், அங்கன்வாடி பணியாளர்களும் வீடு வீடாக சென்று குடற்புழு மாத்திரைகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் விடுபட்ட குழந்தைகளுக்கு 18.08.2025 அன்று வழங்கப்படவுள்ளது. இம்மாத்திரைகளை உட்கொள்வதன் மூலம் ஊட்டச்சத்து குறைபாடுகள் களையப்பட்டு, குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் மாணவ, மாணவிகளின் கல்வித்திறன் மேம்படும். அங்கன்வாடி பணியாளர்கள், கிராம சுகாதார செவிலியர், சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவ அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோர் மூலமாக குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்படவுள்ளது.

தேசிய குடற்புழு நீக்கல் மாத்திரை வழங்கும் திட்டத்தின் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 1,71,590 குழந்தைகள் மற்றும் மாணவர்கள், 45,034 பெண்கள் பயன்பெறவுள்ளனர் என கலெக்டர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.மாரிமுத்து, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.கீதா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ) செல்வகுமார், நகர்மன்றத் துணைத்தலைவர் ஆதவன், தேசிய சுகாதார இயக்க திட்ட இயக்குநர் மரு.விவேகானந்தன், உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு பேரூராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியினை பொது மக்கள் ஆர்வமுடன் பார்வையிட்டார்கள்

## போதைப் பொருள் இல்லாத தமிழ்நாடு மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி

### கலெக்டர் மீ.தங்கவேல் பங்கேற்பு



**கரூர்,ஆக.12-**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் (11.08.2025) நடைபெற்ற "போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு" மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியில் காணொளி காட்சி வாயிலாக, கரூர் தாந்தோணி மலை அரசு கலைக் கல்லூரியில் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் பங்கேற்று உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் தலைமையில் சென்னை நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் காவல் துறையின் சார்பாக நடைபெற்ற "போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு" மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நேரடியாகவும், காணொளி காட்சி வாயிலாக கரூர் தாந்தோணி மலை அரசு கலைக் கல்லூரியில் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் பங்கேற்று உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் கரூர் தாந்தோணி அரசு கலைக் கல்லூரி மாணவ மாணவிகள், போதைப்பொருள் ஒழிப்பு குறித்து உறுதிமொழியை எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் க ஜோஷ் தங்கையா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி) க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), மாநகராட்சி ஆணையர் கே.எம். சுதா, துணை மேயர் ப. சரவணன், உதவி ஆணையர் (கலால்) கருணாகரன், கல்லூரி முதல்வர் முனைவர் க. இராதாகிருஷ்ணன், கல்லூரி மாணவ - மாணவிகள், பேராசிரியர்கள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கந்தர்வக்கோட்டை அருகே அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி



**கந்தர்வக்கோட்டை,ஆக.12-**

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் போதை பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு தலைமை ஆசிரியர் தமிழ் செல்வி தலைமை வகித்தார். கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை அனைவரையும் வரவேற்றார். மாணவ, மாணவிகள் போதை பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர்.

தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வகோட்டை ஒன்றிய செயலாளரும் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா பேசும் பொழுது தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து அவற்றை செயல்படுத்தி வருகிறார். தமிழகத்தை போதைப் பொருள் இல்லாத மாநிலமாக மாற்ற, தமிழகம் முழுவதும் போதை பொருள்களுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த அறிவுறுத்தியுள்ளார். அதன்படி, பொது மக்கள், மாணவ, மாணவிகளிடையே போதை தடுப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

போதைப்பொருள் பழக்கம் முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும். அறியாத சிறு வயதினரிடையே ஏற்படும் இந்தப் பழக்கத்தினால் ஏற்படும் பின்விளைவுகள் குறித்து எடுத்துரைக்க வேண்டும். போதைப் பழக்கத்தினால் ஒருவர் பாதிக்கப்படுவதனால், அவர் மட்டுமின்றி அவருடைய குடும்பம் மற்றும் சமுதாயமும் பாதிக்கப்படுகிறது. எனவே, போதைப் பொருட்களினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாணவ, மாணவிகள், தெரிந்து கொண்டு பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வேண்டும் என்று பேசினார். இந்நிகழ்வில் ஆசிரியர் சிந்தியா கனிமொழி உதவியாளர் தையல் நாயகி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மயிலாடுதுறை தருமை ஆதீனம் குருஞானசம்பந்தர் இலக்கிய மன்ற தொடக்க விழா மற்றும் கூடைப்பந்தாட்ட ஆடுகளம் திறப்பு விழா




**மயிலாடுதுறை,ஆக.12-**

மயிலாடுதுறையில் தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் கோயில் தருமை ஆதீனம், ஸ்ரீ முத்தையா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் இலக்கிய மன்ற தொடக்க விழா மற்றும் கூடைப்பந்தாட்ட ஆடுகளம் திறப்பு விழா (09/08/2025) சனிக்கிழமை நடைபெற்றது.

பள்ளியின் புரவலர் தருமை ஆதீனம் 27-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் எழுந்தருளி ஆசி வழங்கினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம், சிறப்பு விருந்தினர் ராஜராஜேஸ்வரி, IRS, தமிழ்நாடு சட்டப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மற்றும் தீன் சிவகுமார், பள்ளி நிர்வாக குழு தலைவர் மற்றும் செயலர் ஆகியோர் குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள்.

புதிய கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களின் முன்னிலையில் சிறப்பு விருந்தினர் வருமான வரி கூடுதல் ஆணையர் ராஜராஜேஸ்வரி திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் பள்ளியின் நிர்வாக குழு தலைவர். ராஜேஷ் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

இலக்கிய மன்ற மாணவத் தலைவர், விளையாட்டு அணி மாணவ தலைவர்கள் மற்றும் மன்ற தலைவர்களுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் முன்னிலையில் பொறுப்பேற்று கொண்டனர். 2024-2025 கல்வியாண்டில்

10,11 மற்றும் 12ம் வகுப்புகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கும், கலை நிகழ்ச்சியில் பங்கு பெற்ற மாணவர்களுக்கும் சிறப்பு விருந்தினர் பரிசுகளை வழங்கி பாராட்டினார்கள்.

நிகழ்ச்சியில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களிடம் சிறப்பு விருந்தினர்கள் பள்ளி நிர்வாக குழுவினர், முதல்வர், ஆசிரியர்கள், அலுவலகத்தினர் மற்றும் மாணவர்கள் ஆசி பெற்றனர். சிறப்பு விருந்தினர் தன்னுடைய சிறப்புரையில் கிராம பகுதியில் கல்வி பயிலும் மாணவர்களாகிய நீங்கள் போட்டித் தேர்வுகளை எதிர்கொண்டு மத்திய, மாநில அரசு பணிகளில் சேர வேண்டும் எனவும் மாணவர்களை ஊக்கப்படுத்தினார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் தனது ஆசியுரையில் ஒழுக்கத்துடன் கல்வி பயிலும் மாணவர்களே சிறந்த தலைவர்களாக உருவாக முடியும் எனவும், மாணவர்கள் கல்வியுடன் விளையாட்டிலும் போட்டிகளிலும் கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்தார்கள்.

பள்ளி நிர்வாகக் குழு தலைவர் அட்வகேட் ராஜேஷ், செயலர் பாஸ்கரன், மயிலாடுதுறை பள்ளி முதல்வர் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள். நிகழ்ச்சியின் நிறைவாக பள்ளியின் முதல்வர் . ஜெகதீஷ்குமார் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை பள்ளி செயலர் அவர்களின் வழிகாட்டலில் முதல்வர், பொறுப்பாசிரியர்கள், ஆசிரியர்கள், அலுவலகத்தினர் சிறப்பாக செய்திருந்தார்கள்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி

### காணொளிக் காட்சி/fnd கலெக்டர் பொ.ரத்தினசாமி பங்கேற்பு



**அரியலூர்,ஆக.12-**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில், சென்னை நந்தனம் அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற "போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்கும் நேரடி காணொளிக் காட்சி அரியலூர் அரசு மருத்துவக் கல்லூரி அனிதா அரங்கத்தில் ஒளிபரப்பு செய்யப்பட்ட நிகழ்வில் கலெக்டர் பொ.இரத்தினசாமி, கலந்துகொண்டு உறுதிமொழியேற்றார்.

தொடர்ந்து போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு கையெழுத்து பிரச்சாரத்தினை கலெக்டர் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார், பின்னர், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற போதைப் பொருட்களுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியினை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி, இ.கா.ப., கலந்து கொண்டனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க போதை பொருட்கள் இல்லாத தமிழ்நாடு எனும் இலக்கை அடையும் விதமாக போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் குறித்து மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் தமிழ்நாடு துணை முதலமைச்சர் தலைமையில் பள்ளிகள் மற்றும் கல்லூரி மாணாக்கர்கள், இளைஞர்கள், பெண்கள் பங்கேற்கும் போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு மாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்கும் காணொளி காட்சி நிகழ்ச்சியில் கலெக்டர் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றுக்கொண்டார்.

அதன்படி போதை பொருட்கள் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழியான "போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும் எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன். போதைப் பொருட்களின் மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதிகூறுகிறேன்" என்ற உறுதிமொழியினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் நேரடி காணொளிக் காட்சி வாயிலாக வாசிக்க, அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் கலெக்டர் தலைமையில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

இந் நி கழ்ச் சி யில், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, அரியலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.முத்துகிருஷ்ணன், அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் முத்தமிழ்செல்வன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ) பாலசுப்ரமணியன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பரிமளம், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா மற்றும் ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு துணை முதலமைச்சர் காணொலிக் காட்சி வாயிலாக மாநில அளவிலான போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு என்னும் உறுதிமொழி

### தஞ்சாவூர் மாவட்ட மாணாக்கர்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டார்கள்



**தஞ்சாவூர்,ஆக.12-**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் தலைமையில் சென்னையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மாநில அளவிலான போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு என்னும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி (11.08.2025) நடைபெற்றதை தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம் பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரி வளாகத்தில் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம்,இ.ஆ.ப , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம்,த.கா.ப , திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன் , மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன் , துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் தலைமையில் சென்னையிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மாநில அளவிலான போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு என்னும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டத்தில் பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரி வளாகத்தில் கலெக்டர் , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் , திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் , மாநகராட்சி மேயர் , துணை மேயர் மற்றும் பலர் கலந்து கொண்டு மாணாக்கர்களுடன் உறுதிமொழி ஏற்றனர்.

உறுதிமொழி பின்வருமாறு.

போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும், எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து, அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து, அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.

போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணை நிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதி கூறுகிறேன்.

என்ற உறுதிமொழியை தமிழ்நாடு துணை முதலமைச்சர் வாசிக்க அனைத்து மாவட்டத்தில் உள்ள மாணாக்கர்கள் உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்கள்.

அ த னைத் தொ டர்ந்து, கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம்,இ.ஆ.ப தஞ்சாவூர் மாவட்டத்தில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை சார்பில் நடைபெற்ற போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றிப் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்களை வழங்கி சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு மற்றும் சட்ட விரோத கடத்தலுக்கு எதிரான தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

மேலும், மாநிலத்தில் போதைப் பொருள் தடுப்புக் குழுவில் சிறந்து விளங்கிய தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி முதல் பரிசு ரூபாய் 1 இலட்சத்திற்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை துணை முதலமைச்சர் அவர்களிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் இ.மாதவன், மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் பள்ளி) செந்தில், பாரத் கல்லூரி தாளாலர், கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் குமார், வீரபாண்டி, உதவி ஆணையர் கலால் ரேணுகா தேவி, உணவு பாதுகாப்புத் துறை நியமன அலுவலர் மரு.பா.விஜயலலிதாம்பிகை, வட்டாட்சியர் சிவக்குமார், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## நாகப்பட்டினம் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

### கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



**நாகப்பட்டினம்,ஆக.12-**

நாகப்பட்டினம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில்;; மக்கள் குறைதீர்;க்கும் நாள் கூட்டம்; கலெக்டர் ப.ஆகாஷ், தலைமையில் (11.08.2025) நடைபெற்றது.

வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வங்கிக் கடன், உதவித்தொகை, குடும்ப அட்டை, வேலைவாய்ப்பு மற்றும் கல்வி உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மொத்தம் 151 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார். அதனைத் தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் செவித்திறன் குறையுடைய 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.3,500ஃ- மதிப்பீட்டில் காதொலிக் கருவியினையும், கை, கால் பாதிக்கப்பட்ட 01 மாற்றுத்திறனாளிக்கு ரூ.8,900ஃ- மதிப்பீட்டில் சக்கர நாற்காலி என மொத்தம் 02 பயனாளிகளுக்கு ரூ.12,400ஃ- மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் வ.ப¬¬வணந்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆர்.கண்ணன், தனிதுணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) (பொ) அ.பரிமளாதேவி மற்றும் அரசு அலுவலர்கள்; பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

## திருவாரூரில் விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் சார்பில் ஆர்ப்பாட்டம்




**திருவாரூர்,ஆக.12-**

திருவாரூர் புதிய ரயில் நிலையம் முன்பு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மைய மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன்,வடக்குமாவட்ட செயலாளர் தமிழ்ஓவியா, தெற்கு மாவட்டசெயலாளர் வெற்றி ஆகியோர் தலைமையில் நெல்லையில் பொறியாளர் கவின் செல்வகணேஷ் ஆணவ படுகொலை செய்யப்பட்டதை கண்டித்தும்,அவரது குடும்பத்தினருக்கு இழப்பீடு மற்றும் அரசு வேலை வழங்க கோரியும், ஒன்றிய அரசு,தமிழ்நாடுஅரசு ஆணவகொலை தடுப்புச்சட்டம் இயற்ற வலியுறுத்தியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.இதில் தொண்டர்அணி முதன்மைச் செயலாளர் பொதினிவளவன் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார்.

-இந்த ஆர்ப்பாட்டத்தில் நகர செயலாளர் ஆசைத்தம்பி, நாகை நாடாளுமன்ற தொகுதி செயலாளர் இடிமுரசு,மண்டல துணைச் செயலாளர் ரமணி ,முன்னாள் மாவட்டசெயலாளர் வடிவழகன்,ஒன்றிய செயலாளர்கள் மாதவன்,பூபாலன், மண்டல துணைச்செயலாளர் முல்லைவளவன்,சட்டமன்ற தொகுதிசெயலாளர்கள் நிலவன்,பிரகாஷ்,மயிலையன்,துணைச்செயலாளர்கள் மனோகரன்,செய்தி தொடர்பாளர் ஆதவன் மற்றும் நிர்வாகிகள் சேகர்,அந்தோணிராஜ்,அறவாணன்,தமிழ்,அமுதவளவன், மகேந்திரன்,ரகுவரன்,சுகன்யா,சுரேஷ் என 250க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



**சென்னை ஆர்.கே.நகர் 42-வது வடக்கு வட்டத்தில் மக்களை காப்போம் - தமிழகத்தை மீட்போம் என்ற எடப்பாடியாரின் எழுச்சிபயணத்தைமுன்னெடுக்கும்வகையில்வடசென்னை வடக்கு கிழக்கு மாவட்ட செயலாளர் ஆர்.எஸ்.ராஜேஷ், வீடு, வீடாக சென்று ஸ்டிக்கர் ஒட்டி மக்களின் குறைகளை கேட்டறிந்து அதிமுக ஆட்சியின் 10-ஆண்டு சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கினார்.**

## பள்ளிகளில் செயல்படுத்தப்படும் திறன் திட்டமானது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களிடையே அமோக வரவேற்பை பெற்றுள்ளது.

**திருவாரூர்,ஆக.12-**

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திறன் வகுப்பறை நல்ல மாற்றத்தை தருகிறது என்று ஆசிரியர்கள் தெரிவிக் கின் ற னர். இ து கு றித்து தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் சங்க பொறுப்பாளர் ராசேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,தமிழ் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் அடிப்படை அறியா குழந்தைகளுக்கு என்று கொண்டு வரப்பட்ட திட்டமான திறன் வகுப்பறை என்பது தற்போது வெற்றியின் முதல் படியை எட்டியுள்ளது.முப்பது வேலைநாளில் முக்கியக் கற்பிப்பாய் அமைந்த இத்திட்டத்திற்கென வடிவமைக்கப்பட்ட கையேடுகள் மிகச் சிறப்பாக உள்ளன.முப்பது கற்பித்தல் நாளில் விடுப்பெடுப்பது இல்லை என்று ஆசிரியர்கள் கூறுவது மகிழ்ச்சியாக இருக்கிறது.தற்போது ஒருவாரம் கடந்த நிலையில் வெள்ளிக்கிழமை வைக்கப்பட்ட தேர்வில் மாணவர்கள் ஜொலிக்கின்றனர்.திறன் வகுப்பறை என்ற சொல்லாடல் அவர்களுக்கு பிடித்துப்போயிற்று.வகுப்பு,பாலின,வயது பேதமின்றி ஓரணி நின்று கற்கின்றனர்.

அதுவும் புதுமையான கற்பிப்பில் ஒளிர்கின்றனர்.தினசரி மூன்று 90நிமிடங்கள் மாணவர்களுக்கு சலிப்பை உண்டாக்கவில்லை.மகிழ்வாக உணர்கின்றனர்.முதல் 90நிமிடங்கள் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர் வகுப்பில் நுழைந்ததும் எழுந்து நின்று குறிப்பேட்டில் ஆளுக்கு ஒரு சொல் எழுதி வரவேற்கின்றனர்.ஆம் ஒரு நாள் மலர்களின் பெயரை எழுதி,ஒருநாள் மரங்களின் பெயரை எழுதி,ஒரு நாள் பறவைகள் பெயரை எழுதி வரவேற்கின்றனர்.இப்படித்தான் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியரும் வரவேற்கப்படுகிறார். கணித ஆசிரியர் வாய்பாடுகள் கூறிவர வேற்கப்படுகிறார். எழுதிக்காட்டி வாயால் உச்சரிப்பதில் மட்டுமல்ல பார்க்காமல் எழுதக் கற்றே வரவேற்கின்றனர்.திறன் வகுப்பறை காலம் கொண்ட வந்த அற்புதக் கொடை யார் மனதில் உதித்ததோ பார்போற்றும் திட்டம் என்பது மட்டும் உண்மை ஒரு ஒளிக்கீற்று தெரிகிறது முப்பது நாளில் முழு உதயம் கிடைக்கும் என்று அனைத்து பாட ஆசிரியர்களும் ஒன்றிணைந்தால் அனைத்து மாணவர்களும் திறன்மிக்க மாணவர்களாக மாற ஆசை தமிழ்நாடு முதலமைச்சர்,தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், பள்ளிக் கல்வித் துறை அத்தனை அலுவலர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றி.நல்ல திட்டம் நல்ல செயல்பாடு உடனடி பலன் மாறும் பள்ளிக்கல்வி சூழல் இதேபோல் இடைநின்ற மாணவர்களுக்கு சிறப்பு திட்டங்கள் செயல்படுத்த யோசிக்கலாம் என்று கூறியுள்ளார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர்:

# இந்திய அணியின் புதிய துணை கேப்டனாக சுப்மன் கில் நியமனம்



**மும்பை, ஆக. 12-**

17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியின் புதிய துணை கேப்டனாக சுப்மன் கில்லை நியமிக்க பி.சி.சி.ஐ. இந்த முடிவை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது. இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் கேப்டனாக மட்டுமின்றி பேட்ஸ்மேனாகவும் சுப்மன் கில் சிறப்பாக செயல்பட்டதால் இந்து முடிவு எடுக்கப்பட்டதாக தெரிகிறது.

**யூ.ஏ.இ. நடக்கிறது....**

8 அணிகள் இடையிலான 17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் செப்டம்பர் 9-ந்தேதி முதல் 28-ந்தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுகிறது. இந்த தொடர் இம்முறை டி20 வடிவில் நடத்தப்பட உள்ளது. 'ஏ' பிரிவில் நடப்பு சாம்பியன் இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபு அமீரகம், ஓமன் அணிகளும், 'பி' பிரிவில் ஆப்கானிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, ஹாங்காங் அணிகளும் இடம் பெற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். லீக் சுற்று முடிவில் இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் சூப்பர்4 சுற்றுக்கு முன்னேறும்.

**துபாயில் இறுதி....**

இதில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தை செப்.10-ந் தேதி துபாயில் சந்திக்கிறது. இதைத்தொடர்ந்து பரம எதிரியான பாகிஸ்தானை செப்.14-ந் தேதி துபாயிலும், ஓமனை செப்.19-ந் தேதி அபுதாபியிலும் எதிர்கொள்கிறது. இறுதிப் போட்டி செப்.28-ந் தேதி துபாயில் அரங்கேறுகிறது. இந்நிலையில் இந்த தொடருக்கான இந்திய அணியில் சுப்மன் கில் இடம்பெற உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கடந்த வருடம் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான டி20 தொடரில் விளையாடிய அவர் அதன் பின் இந்திய டி20 அணியில் இடம்பெறவில்லை. அந்த சூழலில் தற்போது ஏறக்குறைய ஒரு வருடங்கள் கழித்து மீண்டும் டி20 அணியில் தேர்வு செய்யப்பட உள்ளார்.

**பி.சி.சி.ஐ. திடீர் முடிவு...**

அத்துடன் இந்த தொடரில் அக்சர் படேலுக்கு பதிலாக இந்திய டி20 அணியின் துணை கேப்டனாக சுப்மன் கில் நியமிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தற்போது இந்திய டி20 அணியின் கேப்டனாக சூர்ய குமார் யாதவும், துணை கேப்டனாக அக்சர் படேலும் செயல்படுகின்றனர். இதில் வருங்காலத்தை கருத்தில் கொண்டு சுப்மன் கில்லுக்கு துணை கேப்டன் பதவி வழங்கப்படலாம் என தெரிகிறது. அண்மையில் முடிவடைந்த இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் (5 போட்டிகள்) சுப்மன் கில் தலைமையில் விளையாடிய இந்திய அணி சிறப்பாக செயல்பட்டு தொடரை சமன் செய்தது. அந்த தொடரில் கேப்டனாக மட்டுமின்றி பேட்ஸ்மேனாகவும் சுப்மன் கில் சிறப்பாக செயல்பட்டார். அதன் காரணமாக பி.சி.சி.ஐ. இந்த முடிவை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது.

## வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு

**சென்னை, ஆக. 12-**

வடமேற்கு மற்றும் அதனை ஒட்டியுள்ள மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடக்கு ஆந்திரா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதையடுத்து வருகின்ற 13 - ஆம் தேதி வாக்கில் வடமேற்கு மற்றும் அதனை ஒட்டியுள்ள மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் மற்றும் புதுவையிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

## மேட்டூர் அணையில் நீர் திறப்பு குறைப்பு

**மேட்டூர், ஆக. 12-**

காவிரி டெல்டா மாவட்டங்களில் பெய்து வரும் மழை காரணமாக பாசன தேவை குறைந்தது. இதனால் மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு திறக்கப்படும் நீரின் அளவு வினாடிக்கு 14,000 கன அடியிலிருந்து வினாடிக்கு 10,000 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வினாடிக்கு 9,200 கனஅடியிலிருந்து வினாடிக்கு 8776 கன அடியாக குறைந்துள்ளது. அணையின் நீர்மட்டம் 118.54 அடியிலிருந்து 118.20 அடியாக குறைந்துள்ளது. நீர் இருப்பு 96.62 டிஎம்சியாக உள்ளது.

## சல்மான்கானின் புதிய திட்டம்

இந்தியன் ஸ்ட்ரீட் பிரீமியர் லீக் என்ற டென்னிஸ் பந்து டி-10 கிரிக்கெட் லீக்கில் நியூ டெல்லி அணியின் உரிமையாளராக சல்மான் கான் உள்ளார். ஐபிஎல் தொடர் 2008-ம் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதுவரை 18 சீசன் நடந்து முடிந்துள்ளது. இதில் மும்பை, சென்னை அணிகள் தலா 5 முறை ஐபிஎல் கோப்பையை வென்றுள்ளது.அதற்கு அடுத்தப்படியாக கொல்கத்தா 3 முறை கோப்பை வென்றுள்ளது.

இந்நிலையில் இந்தியன் ஸ்ட்ரீட் பிரீமியர் லீக் (ISPL) என்ற டென்னிஸ் பந்து டி-10 கிரிக்கெட் லீக்கில் நியூ டெல்லி அணியின் உரிமையாளராக சல்மான் கான் உள்ளார். இந்த நிகழ்ச்சியின் போது சல்மான் கானிடம் ஐபிஎல் அணிகளை வாங்கும் எண்ணம் உள்ளாதா என கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு சல்மான் கான் கூறியதாவது:- ஐபிஎல் அணியை வாங்க எனக்கு இப்போது வயதாகிவிட்டது. 2008-ம் ஆண்டு ஐபிஎல் தொடக்கத்தில் அணியை வாங்குவதற்கு அழைப்பு வந்தது. ஆனால் அந்த நேரத்தில் நான் அதை ஏற்கவில்லை. எனக்கு எந்த வருத்தமும் இல்லை. நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். என்று பதிலளித்தார்.

## இளம் வீரருக்கு பி.சி.சி.ஐ. கெடு

8 அணிகள் இடையிலான 17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் செப்டம்பர் 9-ந்தேதி முதல் 28-ந்தேதி வரை ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறுகிறது. இந்த தொடர் இம்முறை டி20 வடிவில் நடத்தப்பட உள்ளது. இந்த தொடருக்கான இந்திய அணி விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு முன்னதாக இந்திய அணியில் இடம்பெற உள்ள முன்னணி வீரர்கள் அனைவரும் பெங்களூருவில் உள்ள தேசிய கிரிக்கெட் அகாடமிக்கு சென்று உடற்தகுதியை நிரூபிக்க வேண்டும் என பி.சி.சி.ஐ. கேட்டுக் கொண்டுள்ளது.

அதன்படி இந்திய அணியின் நட்சத்திர ஆல்ரவுண்டரான ஹர்திக் பாண்ட்யாவையும் உடற்தகுதியை நிரூபிக்க பி.சி.சி.ஐ. கட்டளையிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த தகவலை உறுதிப்படுத்தும் விதமாக பாண்ட்யா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், 'என்சிஏ- க்கு ஒரு குறுகிய பயணம்' என்ற தலைப்பில் பதிவிட்டுள்ளார்.

## மே.இ.தீவுகள் அணி வெற்றி

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ஒருநாள் போட்டி டிரினிடாட்டில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி பந்துவீச்சைத் தேர்வு செய்ய, பாகிஸ்தான் அணி முதலில் விளையாடியது. போட்டியின் இடையே மழை குறுக்கிட்டதால் ஆட்டம் 37 ஓவர்களாக குறைத்து நடத்தப்பட்டது. முதலில் விளையாடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 37 ஓவர்களின் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 171 ரன்கள் எடுத்தது.

அந்த அணியில் ஹாசன் நவாஸ் அதிகபட்சமாக 36 ரன்கள் எடுத்து களத்தில் இருந்தார். அவரைத் தொடர்ந்து, ஹுசைன் டாலட் 31 ரன்களும், அப்துல்லா சஃபீக் 26 ரன்களும் எடுத்தனர். மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் ஜேடன் சீல்ஸ் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். ஜெடியா பிளேட்ஸ், ஷமர் ஜோசப், குடகேஷ் மோட்டி மற்றும் ராஸ்டன் சேஸ் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர். டக்வொர்த் லீவிஸ் விதிப்படி மேற்கிந்தியத் தீவுகளுக்கு 35 ஓவர்களில் 181 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை மேற்கிந்தியத் தீவுகள் 33.2 ஓவர்களில் எட்டிப் பிடித்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உடுமலையில் ரோடு ஷோ



**உடுமலை, ஆக. 12-**

உடுமலையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ரோடு ஷோ சென்றார். பொதுமக்கள் திரண்டுவந்து உற்சாகமாக அவருக்கு வரவேற்பு அளித்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் திருப்பூர் மற்றும் கோவை மாவட்டங்களில் கள ஆய்வுப் பணி மேற்கொள்கிறார். இதற்காக நேற்று முன்தினம் மாலை சென்னையில் இருந்து விமானம் மூலம் புறப்பட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் கோவை விமான நிலையம் வந்தடைந்தார். அவருக்கு திமுக தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். இதனையடுத்து கோவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ரோடு ஷோ சென்றார். வழிநெடுக பொது மக்கள் கூடிநின்று அவரை வரவேற்றனர். இதனையடுத்து முதல்வர் கார் மூலம் திருப்பூர் மாவட்டம் உடுமலை சென்றடைந்தார். இந்நிலையில், உடுமலையில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் திடலுக்கு வரும் வழியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ரோடு ஷோ நடத்தினார். சாலையின் இருபுறமும் நின்று பொதுமக்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.




**பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் டெல்லியில் நேற்று பாராளுமன்ற வளாகத்தில் இருந்து இந்திய தலைமை தேர்தல் ஆணையம் நோக்கி இன்டியா கூட்டணி எம்.பி.க்கள் பிரம்மாண்ட பேரணி நடத்தினர். இந்த பேரணியில் தி.மு.க. எம்.பி. கனிமொழி உள்ளிட்டோர் பதாகைகளை ஏந்தி பங்கேற்றனர்.**

# ஒரே விவகாரத்திற்காக எதிர்க்கட்சிகள் தொடர்ந்து போராட்டம் நடத்துகின்றன

## மத்திய அமைச்சர் ரிஜிஜு குற்றச்சாட்டு

**டெல்லி, ஆக. 12-**

ஒரே ஒரு குறிப்பிட்ட விவகாரத்திற்காக மட்டும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றன என்றும், பாராளுமன்ற விவாதத்தில் பங்கேற்க எதிர்க்கட்சிகளுக்கு விருப்பமில்லை என்றும் மத்திய அமைச்சர் ரிஜிஜு குற்றச்சாட்டியுள்ளார்.

பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த மாதம் 21ம் தேதி தொடங்கியது. கூட்டத்தொடர் தொடங்கியது முதல் பஹல்காம் தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர், பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி ஆகிய விவகாரங்களை விவாதிக்கக்கோரி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இரு அவைகளிலும் அமளியில் ஈடுபட்டு வந்தனர்.

இதையடுத்து, பாராளுமன்றத்தில் ஆபரேஷன் சிந்தூர், பஹல்காம் தாக்குதல் தொடர்பாக விவாதம் நடைபெற்றது. அதேவேளை, பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி தொடர்பாக விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இதனால், அவை நடவடிக்கை தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாராளுமன்ற விவாதத்தில் பங்கேற்க எதிர்க்கட்சிகளுக்கு விருப்பமில்லை என்று மத்திய அமைச்சர் யும், பாராளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சர் யுமான கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, தினமும் நாட்டின் நேரமும், பாராளுமன்றத்தின் நேரமும் ஒரே விவகாரத்திற்காக வீணடிக்கப்படுவதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். ஆகையால், பாராளுமன்றத்தில் முக்கிய மசோதாக்களை நாங்கள் நிறைவேற்றப்போகிறோம்.

முக்கியமான மசோதாக்கள் குறித்து விவாதிக்க அரசு தயாராக உள்ளது. ஆனால், எதிர்க்கட்சிகளின் தொடர் அமளியால் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டு வருகின்றன. பாராளுமன்ற விவாதத்தில் பங்கேற்க எதிர்க்கட்சிகளுக்கு விருப்பமில்லை. மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகள் குறித்து விவாதிக்க எதிர்க்கட்சிகள் விரும்பவில்லை. ஒரே ஒரு குறிப்பிட்ட விவகாரத்திற்காக மட்டும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றன.

நீங்கள் ஒரு பிரச்சினையை எழுப்புகிறீர்கள். அதற்கு ஒரு நாள் எடுத்துக் கொள்ளலாம். ஆனால், அதே பிரச்சினையை ஒவ்வொரு நாளும் எழுப்புவதால் என்ன பயன். வருமான வரி மசோதா, தேசிய விளையாட்டு நிர்வாக மசோதா, வணிக கப்பல் மசோதா, தேசிய ஊக்க மருந்து எதிர்ப்பு (திருத்தம்) மசோதா, மணிப்பூர் சரக்கு மற்றும் சேவை வரி (திருத்தம்) மசோதா உள்பட பல்வேறு மசோதாக்கள் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிலுவையில் உள்ளன. முக்கிய மசோதாக்களை பாராளுமன்றத்தி இரு அவைகளிலும் நிறைவேற்றுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்தியா 'ஏ' அணியில் விளையாட வேண்டும்:

# ரோகித் சர்மா, கோலிக்கு பி.சி.சி.ஐ. அறிவுறுத்தல்



**புதுடெல்லி, ஆக. 11-**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு முன்பு ரோகித்சர்மாவும், விராட்கோலியும் இந்தியா 'ஏ' அணியில் விளையாட வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ) விருப்பம் தெரிவித்துள்ளது.

**திடீர் ஓய்வு அறிவிப்பு...**

இந்திய அணியின் மூத்த வீரர்களான ரோகித் சர்மா, விராட் கோலி கடந்த ஆண்டு 20 ஓவர் உலக கோப்பை வெற்றிக்குப் பிறகு, சர்வதேச 20 ஓவர் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றனர். இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு முன்பாக, யாரும் எதிர்பாராத விதமாக இருவரும் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தனர். 20 ஓவர் மற்றும் டெஸ்ட்களில் ஓய்வு பெற்ற போதிலும் இருவரும் இந்திய அணிக்காக தொடர்ந்து ஒருநாள் போட்டிகளில் விளையாட உள்ளனர்.

**ஒருநாள் தொடரில்....**

இந்திய அணி அடுத்து ஆசிய கோப்பை 20 ஓவர் போட்டியிலும், அதை தொடர்ந்து வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான 2 டெஸ்ட் போட்டியிலும் ஆடுகிறது. இதன் பிறகுதான் இந்தியாவுக்கு ஒருநாள் போட்டி இருக்கிறது. ஆஸ்திரேலியாவுடன் அக்டோபர் 19-ம் தேதி முதல் 25-ம் தேதி வரை (பெர்த், அடிலெய்டு, சிட்னி) 3 ஒருநாள் போட்டியில் ஆடுகிறது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ரோகித் சர்மாவும், விராட் கோலியும் இடம் பெறுவார்கள்.

**இந்தியா ஏ அணியில்...**

இந்த நிலையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடருக்கு முன்பு ரோகித்சர்மாவும், விராட்கோலியும் இந்தியா 'ஏ' அணியில் விளையாட வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (பி.சி.சி.ஐ) விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்தியா 'ஏ'-ஆஸ்திரேலியா 'ஏ' அணிகள் இடையேயான 3 போட்டிகள் செப்டம்பர் 30, அக்டோபர் 3 மற்றும் 5-ம் தேதிகளில் கான்பூரில் நடக்கிறது. இருவரும் ஆட வேண்டும் என்று பி.சி.சி.ஐ. வலியுறுத்தி உள்ளது. இதே போல் விஜய் ஹசாரே போட்டியில் விளையாடலாம் என கூறப்படுகிறது.

### முடியும் தருவாயில்...

விராட் கோலி ஒருநாள் போட்டியில் 14,181 ரன்னும் (51 சதம், 74 அரை சதம்), ரோகித்சர்மா 11,168 ரன்னும் (32 சதம், 58 அரை சதம்) எடுத்துள்ளனர். இருவரது கிரிக்கெட் வாழ்க்கையும் கிட்டத்தட்ட முடியும் தருவாயில் உள்ளது.

தொடர்ச்சியாக 9 வெற்றிகள்:

# டி-20 போட்டியில் ஆஸி., சாதனை




**மெலபோர்ன், ஆக. 12-**

டி-20 போட்டிகளில் தொடர்ச்சியாக அதிக வெற்றிகளைப் பதிவு செய்து ஆஸ்திரேலிய அணி சாதனை படைத்துள்ளது.

**சுற்றுப்பயணம்...**

தென்னாப்பிரிக்கா அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு டி-20 மற்றும் ஒரு நாள் தொடர்களில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான டி-20 தொடர் முதலில் நடைபெறுகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டி-20 போட்டி டார்வினில் நேற்று முன்தினம் (ஆகஸ்ட் 10) நடைபெற்றது. இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 17 ரன்கள் வித்தியாசத்தில் தென் னாப் பி ரிக் காவை வீழ்த்தியது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட டி-20 தொடரை ஆஸ்திரேலிய அணி வெற்றியுடன் தொடங்கியுள்ளது.

**தொடர் வெற்றிகள்...**

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதல் டி-20 போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம், டி-20 போட்டிகளில் தொடர்ச்சியாக 9 போட்டிகளில் வெற்றி பெற்று ஆஸ்திரேலிய அணி சாதனை படைத்துள்ளது. இதற்கு முன்பாக, கடந்த ஆண்டு பிப்ரவரி முதல் ஜூன் இடைவெளியில் டி-20 போட்டிகளில் தொடர்ச்சியாக 8 வெற்றிகள் பெற்றிருந்ததே ஆஸ்திரேலிய அணி இதுவரையில் தொடர்ச்சியாக பெற்றிருந்த அதிக வெற்றிகளாக இருந்தது வந்தது. ஆஸ்திரேலியா - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டி-20 போட்டி இன்று (ஆகஸ்ட் 12) நடைபெறவுள்ளது.


தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

பாலியல் வன்கொடுமை புகார்:

# உத்தரபிரதேச டி-20 லீக் தொடரில் பங்கேற்க யாஷ் தயாளுக்கு தடை

**லக்னோ, ஆக. 12-**

உத்தரபிரதேச டி20 லீக் தொடரின் 3-வது சீசன் வரும் 17-ம் தேதி தொடங்க உள்ளது. இந்த தொடரில் பாலியல் வன்கொடுமை வழக்கில் சிக்கியதன் காரணமாக யாஷ் தயாள் பங்கேற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.




**பெங்களூரு அணிக்கு...**

ஐ.பி.எல். தொடரில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்காக விளையாடிய யாஷ் தயாள் மீது உத்திரபிரதேசம் மாநிலம் காசியாபாத் நகரை சேர்ந்த பெண் ஒருவர் கடந்த ஜூன் மாதம் திருமண மோசடி புகார் அளித்திருந்தார். இந்த வழக்கில் யாஷ் தயாள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. எனினும், இந்த வழக்கில் அலகாபாத் உயர் நீதிமன்றம் யாஷ் தயாளை கைது செய்ய இடைக்கால தடை விதித்தது.

**வன்கொடுமை புகார்...**

இந்த பரபரப்பு முடிவடைதற்குள் யாஷ் தயாள் மீது ஜெய்ப்பூரை சேர்ந்த இளம் கிரிக்கெட் வீராங்கனை பாலியல் வன்கொடுமை புகார் அளித்தார். அந்த புகாரில், கிரிக்கெட்டில் தன்னை வளர்த்துவிடுவதாக ஆசை வார்த்தை கூறி கடந்த 2 ஆண்டுகளாக யாஷ் தயால் தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக கூறியிருந்தார். அந்த பெண் பாதிக்கப்பட்டபோது, அவருக்கு 17 வயதே ஆனதால், யாஷ் தயாள் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

கவின் கொலை வழக்கு:

# சுர்ஜித் தந்தைக்கு சி.பி.சி.ஐ.டி. காவல்

**நெல்லை, ஆக. 12-**

கவின் கொலை வழக்கில் சுர்ஜித் மற்றும் அவரது தந்தைக்கு சி.பி.சி.ஐ.டி. காவலில் எடுத்து விசாரிக்க நீதிபதி அனுமதி அளிததுள்ளார்.

கவின் கொலை வழக்கில் கைதான சுர்ஜித் மற்றும் அவரின் தந்தை சரவணனை 2 நாள்கள் சிபிசிஐடி காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இருவரையும் காவலில் எடுத்து விசாரிக்க சிபிசிஐடி கோரியிருந்த நிலையில், ஆக. 13ஆம் தேதி வரை காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் அருகேயுள்ள ஆறுமுகமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த மென்பொறியாளர் கவின் செல்வகணேஷ் கடந்த ஜூலை 27-ஆம் தேதி கொலை செய்யப்பட்டார். வேறு சமூகத்தைச் சேர்ந்த பெண்ணை காதலித்துவந்ததால், காதலியின் சகோதரர் சுர்ஜித், கவினை வெட்டிப் படுகொலை செய்துள்ளார். பின்னர், பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் சரண் அடைந்தார். அவர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் குண்டர் சட்டத்தில் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

காவல் உதவி ஆய்வாளர்களான சுர்ஜித்தின் பெற்றோருக்கு இந்த கொலையில் சம்மதம் இருப்பதாக புகார் தெரிவித்த கவினின் பெற்றோர், அவர்களை கைது செய்யக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தைத் தொடர்ந்து, சுர்ஜித்தின் பெற்றோரை இரண்டாவது மற்றும் மூன்றாவது குற்றவாளிகளாக முதல் தகவல் அறிக்கையில் காவல் துறையினர் சேர்த்தனர். வழக்கின் விசாரணை காரணமாக அவர்கள் இருவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே, இந்த வழக்கை, சிபிசிஐடிக்கு மாற்றி தமிழக அரசு உத்தரவிட்டது. வழக்கில் விரிவான விசாரணைக்காக சுர்ஜித் மற்றும் அவரின் தந்தையை காவலில் எடுத்து விசாரிக்க நீதிமன்றத்தில் சிபிசிஐடி மனுத்தாக்கல் செய்தது.

இந்த மனுவின் மீதான விசாரணையில் ஆக. 13ஆம் தேதி வரை சுர்ஜித்தையும் அவரின் தந்தை சரவணனையும் காவலில் எடுத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில்

# சர்வதேச எல்லையில் ஊடுருவ முயன்றவர் மீது துப்பாக்கி சுடு

**டெல்லி, ஆக. 12-**

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் சர்வதேச எல்லையில் ஊடுருவ முயன்றவர் மீது துப்பாக்கி சுடு நடந்துள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் உள்ள கத்துவா மாவட்டத்தின் சந்த்வான், கோதே எல்லை அவுட்போஸ்ட்கள் இடையே உஷார் படுத்தப்பட்ட எல்லை பாதுகாப்புப் படையினர், ஊடுருவ இருந்தவர்களை கவனித்தனர். ஊடுருவல் காரர்களுக்கு பல முறை வீரர்கள் எச்சரித்தும் அவர்கள் கண்டுகொள்ளவில்லை எனத் தெரிகிறது.

இதனால் இந்திய வீரர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் ஊடுருவ முயன்றவர்களில் ஒருவர் காயம் அடைந்தார்.

குண்டு பாய்ந்த நபர் கைது செய்யப்பட்டு, சிகிச்சைக்காக உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

மேலும் அவருடைய அடையாளம், இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்றதற்கான நோக்கம் குறித்து விசாரணை நடத்த உள்ளனர். விசாரணை முடிவில்தான் அவர் ஏன் ஊடுருவ முயன்றார் என்பது தெரிய வரும்.

# நங்கநல்லூர், அருள்மிகு பக்த ஆஞ்சநேயர் திருக்கோயில் தங்கத் தேருக்கு 9.5 கிலோ தங்கத்தை கொண்டு தங்க ரேக் பதிக்கும் பணி: அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தனர்





**சென்னை,ஆக.12**

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்தா.மோ.அன்பரசன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் (11.08.2025) சென்னை, நங்கநல்லூர் அருள்மிகு ஆதிவ்யாதிஹர பக்த ஆஞ்சநேயர் திருக்கோயிலில் புதிய தங்கத் தேருக்கு 9.5 கிலோ கிராம் எடை கொண்ட தங்கத்தை கொண்டு தங்க ரேக் பதிக்கும் பணிகளை தொடங்கி வைத்தனர்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் 70 தங்கத்தேர்களும், 60 வெள்ளித்தேர்களும் உள்ளன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், கடந்த நான்காண்டுகளில் ரூ.31 கோடி மதிப்பீட்டில் 5 தங்கத்தேர்களும், ரூ.29.77 கோடி மதிப்பீட்டில் 9 வெள்ளித்தேர்களும் உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதில் பெரியபாளையம் திருக்கோயில் தங்கத்தேர், திருத்தணி மற்றும் சென்னை காளிகாம்பாள் ஆகிய திருக்கோயில்களின் வெள்ளித்தேர்கள் நிறைவு பெற்று பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

நங்கநல்லூர் அருள்மிகு ஆதிவ்யாதிஹர பக்த ஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கு ரூ.8 கோடி மதிப்பீட்டில் புதிய தங்கத்தேர் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. புதிய தங்கத்தேருக்கு ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் மரத்தேர் செய்யப்பட்டு, அதற்கு ரூ.12.31 லட்சம் செலவில் செப்புத்தகடு வேயும் பணி நிறைவுபெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து உபயதாரர் பங்களிப்போடு 9 கிலோ 500 கிராம் எடை கொண்ட தங்கத்தை கொண்டு தங்க ரேக் பதிக்கும் பணி இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றபின், ரூ.75.55 கோடி மதிப்பீட்டில் 130 திருக்கோயில்களுக்கு 134 மரத்தேர்கள் உருவாக்கப்பட்டு வருவதோடு, ரூ.19.20 கோடி மதிப்பீட்டில் 72 திருக்கோயில்களில் உள்ள 75 மரத்தேர்கள் மராமத்து செய்யும் பணி நடைபெற்று வருகிறது. திருத்தேர்களை பாதுகாக்கும் வகையில் ரூ.30.31 கோடி மதிப்பீட்டில் 197 திருத்தேர் பாதுகாப்பு கொட்டகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்தாண்டு சட்டமன்ற அறிவிப்பின்படி வேலூர் மாவட்டம், வெட்டுவானம் எல்லையம்மன் திருக்கோயிலுக்கு ரூ.1 கோடி மதிப்பீட்டில் புதிய வெள்ளித் தேர் உருவாக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

நீண்ட ஆண்டுகளாக பழுதடைந்து ஓடாமல் இருந்த மரத்தேர்கள், தங்கத்தேர்கள் மற்றும் வெள்ளித்தேர்கள் பழுது நீக்கப்பட்டு உலா வரச்செய்யப்பட்டுள்ளன. 150 ஆண்டுகளுக்கு பின் விழுப்புரம் மாவட்டம், பூவரசன்குப்பம், அருள்மிகு இலட்சுமி நரசிம்மர் சுவாமி திருக்கோயில் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம், ஆதிதிருவரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் திருத்தேர்களும், 100 ஆண்டுகளுக்கு பின் தஞ்சாவூர் மாவட்டம், பட்டீஸ்வரம், தேனுபுரீஸ்வரர் திருக்கோயில் திருத்தேர், 87 ஆண்டுகளுக்கு பின் சென்னை, சிந்தாதரிப்பேட்டை, அருள்மிகு ஆதி கேசவப் பெருமாள் மற்றும் ஆதிபுரீஸ்வரர் திருக்கோயில் திருத்தேர், 80 ஆண்டுகளுக்கு பின் காஞ்சிபுரம் மாவட்டம், சீட்டனஞ்சேரி, அருள்மிகு காளீஸ்வரர் திருக்கோயில் திருத்தேர் பழுது நீக்கப்பட்டும், 11 ஆண்டுகளுக்கு பின் இராமேசுவரம் மற்றும் சமயபுரம் தங்கத்தேர்களும், 9 ஆண்டுகளுக்கு பின் சேலம், அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில் தங்கத் தேரும் சீரமைக்கப்பட்டு நேர்த்திக்கடன் செலுத்திடும் வகையில் பக்தர்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. திருக்கோயில்களுக்கு காணிக்கையாகப் வரப்பெற்ற பலமாற்று பொன் இனங்களில் பயன்படுத்த இயலாத பொன் இனங்களை ஒன்றிய அரசுக்குச் சொந்தமான தங்க உருக்காலையில் உருக்கி, சுத்த தங்கக் கட்டிகளாக மாற்றி, திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டு திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ஓய்வு பெற்ற மாண்பமை உச்சநீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 21 திருக்கோயில்களுக்குச் சொந்தமான 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லிகிராம் சுத்த தங்க கட்டிகள் தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டு, ஆண்டுதோறும் வட்டியாக ரூ.17.76 கோடி கிடைக்கப்பெறுகிறது. இந்தத் தொகை அந்தந்த திருக்கோயிலின் மேம்பாட்டு பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, பல்வேறு புதிய திட்டங்களையும், சேவைகளையும் செயல்படுத்தி இறையன்பர்கள் மகிழ்ச்சியுறும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை செயலாற்றி வருகிறது என்று தெரிவித்தார்இந்நிகழ்வின் போது, சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர். பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, , இணை ஆணையர்கள் இரா. வான்மதி, கி.ரேணுகா தேவி, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர்என். சந்திரன், துணை ஆணையர் இரா.ஹரிஹரன், உதவி ஆணையர்கி.பாரதிராஜா, திருக்கோயில் தக்கார் எம்.கோதண்டராமன், செயல் அலுவலர்ஆ.குமரேசன் கலந்து கொண்டனர்.

# அபிராமபுரம் பகுதியில் குட்கா புகையிலை பாக்கெட்டுகளை விற்பனை செய்த வழக்கில் 2 பேர் கைது

**சென்னை ஆக 12-**

அபிராமபுரம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் காவல் குழுவினர் அபிராமபுரம், டிடிகே சாலையில் உள்ள பெயர் பலகை இல்லாத கடையின் அருகே நின்று கொண்டிருந்த ஒரு நபரை விசாரணை செய்து, மேற்படி கடையை சோதனை செய்தபோது, அங்கு குட்கா புகையிலை பாக்கெட்டுகளை விற்பனைக்காக பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

அதன்பேரில், அபிராமபுரம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, சட்டவிரோத விற்பனைக்காக குட்கா புகையிலை பாக்கெட்டுகளை வைத்திருந்த எதிரி 1.சிகாப், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 48 கிலோ 500 கிராம் எடை கொண்ட ஹான்ஸ் குட்கா புகையிலை பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும் எதிரி சிகாப் கொடுத்த தகவலின்பேரில், ஆழ்வார்பேட்டை, ஆழ்வார் பேட்டை தெருவில் உள்ள ஒரு டீக்கடையில் குட்கா புகையிலை பாக்கெட்டுகளை பதுக்கி வைத்திருந்த எதிரி 2.அஜிஸ்பரம்பேரி, என்பவரை கைது செய்து, அவரிடமிருந்து 900 கிராம் எடை கொண்ட செய்யப்பட்ட ஹான்ஸ் குட்கா புகையிலை பாக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரிகள் பெங்களூரில் இருந்து குட்கா புகையிலை பாக்கெட்டுகளை கடத்தி வந்து, சென்னையில் விற்பனை செய்வதற்காக பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# சென்னையில் மாணவர்கள், ஐடி ஊழியர்களை குறி வைத்து போதைப்பொருள் விற்ற 4,000 பேர் கைது

**சென்னை ஆக 12-**

சென்னையில் மாணவர்கள், ஐடி ஊழியர்களை குறி வைத்து போதைப்பொருள் விற்ற 4,000 பேர் கைது: 2.9 மெட்ரிக் டன் கஞ்சா, 67,700 போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டது.

சென்னை பெருநகர காவல் எல்லையில் போலீஸ் கமிஷனர் அருண் தலைமையிலான போலீசார் 'போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கை' என்ற பெயரில் அதிரடி சோதனை நடத்தி போதைப் பொருள் விற்பனை மற்றும் கடத்தலை தடுத்து வருகின்றனர். மேலும், கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் சென்னையில் தென்மாநில டிஜிபிக்கள் ஒருங்கிணைப்பு மாநாடு நடந்தது.

இந்த மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் போதைப் பொருள் மற்றும் தொடர்புடைய அச்சுறுத்தல்களை சமாளிப்பதற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர். அதனை தொடர்ந்து போதைப்பொருள் வழக்கில் சென்னை காவல்துறை வெளி மாநில காவல்துறையுடன் இணைந்து பல்வேறு அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.மேலும், தமிழக காவல்துறையில் போதைப் பொருள் கட்டுப்படுத்த தனியாக உதவி கமிஷனர் ஒருவர் தலைமையில் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 'போதைப்பொருள் எதிர்ப்பு புலனாய்வு பிரிவு' ஒன்று தொடங்கப்பட்டது.

உளவுத்துறை தலைமையில் இந்த பிரிவு சிறப்பாக செயல்பட்டாலும், சென்னையில் உள்ள 12 காவல் மாவட்டத்திலும் போதைப்பொருள் எதிர்ப்பு புலனாய்வு பிரிவு தொடங்கப்பட்டு சென்னை முழுவதும் பள்ளி, கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக நிறுவனங்கள் அருகே அதிரடி சோதனை நடத்தி போதைப் பொருட்கள் விற்பனை செய்தவர்களை கைது செய்து வருகின்றனர்.

மேலும், ஐடி நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதிகளில் கண்காணித்து ஐடி ஊழியர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்யும் வெளிமாநில, வெளிநாடுகளை சேர்ந்தவர்களை கூண்டோடு கைது செய்து வருகின்றனர். அதன்படி, சென்னை காவல்துறை கடந்த ஓராண்டில் போதைப்பொருட்ளுக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளது.

அதன் விளைவாக போதைப்பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் சென்னை முழுவதும் போதைப்பொருட்கள் விற்பனை செய்ததாக 1,516 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 2.9 மெட்ரிக் டன் கஞ்சா (அதாவது ரூ.3.87 கோடி மதிப்புள்ள கஞ்சா), 67,700க்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.இந்த அதிரடி நடவடிக்கையில் போதைப்பொருட்கள் விற்பனை செய்ததாக வெளி மாநிலத்தை சேர்ந்த 324 போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் 26 வெளி நாட்டினர் உள்பட 4,000க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். உளவுத்துறை தகவல்களின் அடிப்படையில் மிகத்துல்லியமான மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மூலம் போதைப்பொருள் கும்பல் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட அனைவரும் கல்லூரி மாணவர்கள் மற்றும் ஐடி ஊழியர்களை குறிவைத்து போதைப் பொருள் விற்பனை செய்து வந்ததும் விசாரணையில் தெரியவந்துள்ளது



**வளசரவாக்கம்மண்டலம்144வதுவார்டுஅய்யாவுதெருவில் கழிவு நீர் இணைப்பு குறித்து குடிநீர் மற்றும் கழிவு நீர் வாரிய அதிகாரிகளுடன் மாமன்ற உறுப்பினர் எம்.இ.ஸ்டாலின் ஆய்வு செய்தார்.**

## நகை ஏல அறிவிப்பு

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, ஆக்கூர் திருமுல்லைவாசல், எண்.4/42–A, நேரு வீதி "மருதர் பேங்கர்ஸ்" நகை அடகு கடையில் 01.01.2020 முதல் 28.06.2023 வரை உள்ள அடகு வைக்கப்பட்டு காலம் கடந்தும் மீட்கப்படாதிருக்கும் தங்கம், வெள்ளி மற்றும் உள்ள வகையறாக்களை சீர்காழி RDO அவர்களின் KDIS No.1157/2025/A-4 உத்தரவுப்படி 21.08.2025 காலை 10.00 மணி முதல் என்னால் பகிரங்க ஏலம் விடப்படும். இந்த அறிவிப்பு நகை அடகு வைத்தவர்களுக்கும், இறந்தவர்களின் வாரிசுகளுக்கும் வெளிநாடு சென்றவர்களுக்கும் பொருந்தும்.

M.ரவிச்சந்திரன்,
மாவட்ட ஏலதாரர்,
2A, பெரிய தைக்கால் தெரு,
மயிலாடுதுறை.

## குளித்தலை சார்பு நீதிமன்றம் கோட்டார் அவர்கள் சமூகம்
## O.S.No.254/2022
## F.A.No.1/2022

1.அடக்கி, க/பெ.அண்ணாவி, த/பெ.லேட்.பெரியண்ணன், குறிஞ்சி நகர், சேர்வைராயன்மலை தோகைமலை கிராமம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.
2.ஆரியமாலை, க/பெ.லேட். பெரியசாமி, த/பெ.பெரியண்ணன், சின்னகவுண்டன்பட்டி, நெய்தலூர் வடக்கு கிராமம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.

– வாதிகள்

– எதிர் –

மணி, த/பெ.கோட்டையன், கீழத் தெரு, குறிச்சி, நங்கவரம் கிராமம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.

– 2–ம் பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி வாதிகள் 2–ம் பிரதிவாதியான தங்கள் மீதும் மற்ற பிரதிவாதிகள் மீதும் சமூகம் கோர்ட்டில் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்திற்கும் மற்றும் நங்கவரம் பதிவு அலுவலகத்தில் ஆவண எண்.1883/2022 எண்ணாக பதிவாகியுள்ள ஆவணத்தை செல்லத்தக்கதல்ல என்பதற்கும் வழக்கு தொடர்ந்துள்ளார்கள். அதில் தங்களது ஆட்சேபணையை தெரிவிக்க 22.09.2025–ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் நேரிலோ அல்லது வக்கீல் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் தங்கள் மீது ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு ஏற்படும் என்பதை அறியவும்.

**P.K.LAW OFFICE**
**K.VIJAYAKUMAR,**
**ADVOCATE, KULITHALAI.**

## மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்
## M.C.O.P.NO.24/2025

J. மலர்கொடி மற்றும் மூன்று நபர்கள் – மனுதாரர்கள்

– எதிர் –

வெங்கடேஷ் மற்றும் ஒருவர். – எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

திருவாரூர் மாவட்டம், குடவாசல் தாலுக்கா, கீழஞானச்சேரி, கதவு எண்.3/19 என்ற முகவரியில் வசித்து வரும் ஜெயராமன் அவர்களின் மனைவி இந்து, சிவமதம், சுமார் 64 வயதுள்ள J.மலர்கொடி ஆகிய மனுதாரர் மேற்படி எதிர்மனுதாரருக்கு எதிராக திருவாரூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதமன்றத்தில் நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கின் விபரம் தெரிவிக்கும் பொருட்டு 2–ம் எதிர்மனுதாரரான தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், திருச்சேரி பிள்ளையார் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் மகாராஜ் அவர்களின் மகன் இந்து சிவமதம் M.ராமன் ஆகிய தங்களுக்கு நீதிமன்றம் மூலம் நோட்டீஸ் அனுப்பப்பட்டு சார்வு ஆகாத காரணத்தால் செய்திதாள் மூலம் விளம்பரம் செய்ய சமூகம் நீதிமன்றத்தில் உத்தரவாகி விசாரணைக்காக வருகின்ற 12.09.2025 அன்று வாய்தா தேதி போடப்பட்டுள்ளது. ஆகவே 2–ம் எதிர்மனுதாரர் மேற்படி வாய்தா தேதியான 12.09.2025 அன்று காலை 10.00 மணிக்கு மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதமன்றத்தில் தாங்களோ (அ) தங்கள் வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி ஏதேனும் கட்சி இருப்பின் தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும்பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**P.Kabinaya, B.Sc.,LL.B.,**
**வழக்கறிஞர், திருவாரூர்,**
**செல். 93636 93553**

## பொது அறிவிப்பு
## மாவட்ட முதன்மை நீதிமன்றம், திருவாரூர்
## O S No: 50/2023

ரமேஷ் –வாதி

எதிர்

1. கிருஷ்ணமூர்த்தி
2. சுபாஷ்
3. பிரபா
4. ராதிகா
5. ஜெயஸ்ரீ, த/பெ. கிருஷ்ணமூர்த்தி, க/பெ. முருகேசன், கீழத்தெரு, ஒக்கநாடுகீழையூர், ஒக்கூர் அஞ்சல், தஞ்சாவூர் மாவட்டம்.
6. சூர்யகலா
7. சார்பதிவாளர், மன்னார்குடி
8. சார்பதிவாளர், உள்ளிக்கோட்டை
9. சார்பதிவாளர், மங்களம்பேட்டை
10. தமிழ்நாடு அரசுக்காக அதன் மாவட்ட ஆட்சியர், திருவாரூர்
11. தமிழ்நாடு அரசுக்காக அதன் மாவட்ட ஆட்சியர், விழுப்புரம்

–பிரதிவாதிகள்

மேற்படி வழக்கில், வழக்கு தரப்பினரும் 5ம் பிரதிவாதியுமான தஞ்சாவூர் மாவட்டம், ஒக்கநாடுகீழையூர், ஒக்கூர் அஞ்சல், கீழத்தெருவில் வசிக்கும் முருகேசன் அவர்கள் மனைவியும், கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மகளுமான ஜெயஸ்ரீ அவர்களுக்கு அனுப்பப்பட்ட, நீதிமன்ற அழைப்பாணை சார்வ் செய்யும்போது வெளியூரில் உள்ளார் என்று சார்வ் செய்யாமல் நீதிமன்ற அழைப்பானை திருப்பப்பட்டுள்ளதால், நீதிமன்ற உத்திரவுப்படிக்கு, இந்த அறிவிப்பு கொடுக்கப்பட்டு உள்ளது. இவ்வழக்கில் வருகிற 19–08–2025ம் தேதி, வாய்தா போடப்பட்டுள்ளதால், அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு திருவாரூர் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் நேரிலோ, முகவர்/ வழக்கறிஞர் முலமாகவோ 5ம் பிரதிவாதி ஆஜராகி தன்கட்சியை /ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ளலாம் என்றும், இல்லாதவரையில் நீதிமன்றம் ஒருதலைபட்சமாக தீர்வு செய்ய நேரிடும் என்பதையும் இந்த பொது அறிவிப்பு முலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொத்து விவரம் வழக்கறிஞர்

நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், தற்போது திருவாரூர் பதிவு மாவட்டம்அ மன்னார்குடி தாலுக்கா, பைங்காநாடு கிராமம், வல்லூர் கிராமம், 'B' ஷெட்யூல், 1972ம் ஆண்டு பதிவு செய்யப்படாத வாய்மொழி பாகப்பத்திரபடி :

| S.No. | R.S. No. | ஸ்தத்தின் விபரம் | நஞ்சை | புஞ்சை |
|---|---|---|---|---|
| 1. | 1006 | கரம்பை நடு நீளம் | 1 43 | |
| 2. | 1008 | கரம்பை நடு நீளம் | 0 84 | |
| 3. | 1008 | கரம்பை கீழ்புறம் | 0 | 48 |
| 4. | 1019/1 | பத்தக்காடு பள்ளம் | 1 33 | |
| 5. | 1019 | பத்தக்காடு பள்ளம் | 1 38 | |
| 6. | 244/19 | பத்தக்காடு மேடு கீழ்புறம் | 0 61 | |
| 7. | 244/19 | பத்தக்காடு மேடு நடு நாத்தாங்கால் | 0 30 | |
| 8. | 246 | பத்தக்காடு மேடு நடு நாத்தாங்கால் | 0 32 | |
| 9. | 246 | பத்தக்காடு மேடு நடு நாத்தாங்கால் | 1 03 | |
| 10. | 103/1C | எருக்குவெட்டி வடபுறம் | 2 30 | |
| 11. | 103/1C | எருக்குவெட்டி முக்கு | 0 48 | |
| 12. | 103/1C | எருக்கு வெட்டி கீழ்புறம் மேடு | 0 20 | |
| 13. | 114/10B | பிச்சைக்கண்ணு கிடாத்தலையார் நாத்தாங்கால் மேல்புறம் | 0 20 | |
| 14. | 122B 2A/3 | கணேசன் நாத்தாங்கால் மேல்புறம் | 0 47 | |
| 15. | 112A/7 | | 0 25 | |
| 16. | 112B/1 | செவக்கொல்லை | 0 42 | |
| 17. | 112A/6A | செட்டிதளை | 0 20 | |
| 18. | 112A/6C | செட்டிதளை தென்புறம் | 0 26 | |
| 19. | 201A | உமையாண்டாள் வாம்பல் | 0 17 | |
| 20. | | உமையாண்டான் வாம்பல் | 0 31 | |
| 21. | 201A/13 | ஒக்கநாட்டார் குண்டு | 0 23 | |
| 22. | 198A/1 | திருமன் கொல்லை | 0 35 | |
| 23. | 106/3 | பிச்சை கிடாத்தலைவர் குருவை பங்கு | 0 34 | |
| 24 | 127A/13 | அருமடான் தோப்பு | 0 0 | 0 18 |
| 25 | 127A/11 | அருமடான் தோப்பு | 0 0 | 1 6 |
| 26 | 103/2 | எருக்குவெட்டி சவுக்கு கீழ்புறம் | | 0 42 |
| 27 | 194/8 | முங்கில் கொல்லை கீழ்புறம் | | 0 6 |
| 28 | 196/1 | எடையன் கொல்லை பூறா | | 0 97 |
| 29 | 117 | தென்னந்தோப்பு மேல்புறம் | | 0 25 |
| 30 | 119A 8C | தென்னந்தோப்பு கீழ்புறம் மூங்கிகுத்து உட்பட | | 0 35 |
| 31 | 196/8 | சின்னத்தம்பி கொல்லை கீழ்புறம் மரம் தழை உள்பட | | 0 39 |
| 32 | 132/11A | பிடாரி குளம் நஞ்சை | 0 35 | |
| 33 | | திருமக்கோட்டை கிராமத்தில் ஏரி நஞ்சை | 2 32 | |
| 34 | | வல்லூர் வட்டம் தச்சன்வயல் கிராமத்தில் புஞ்சை சவுக்குத் தோப்பு, பலவித மரங்கள்உள்படவும் | | 2 25 |
| 35 | | புஞ்சை சவுக்குத்தோப்பு, பல வித மரங்கள் உள்படவும்கீழ்புறம் சவுக்கு | | 1 34 |
| 36 | | புஞ்சை சவுக்குத்தோப்பு, பல வித மரங்கள் உள்படவும் கீழ்புறம் சவுக்கு | | 1 16 |
| | | கூடுதல் | 16 57 | 8 43 |

நஞ்சை + புஞ்சை கூடுதல் 25ஏக்கர்Xஒரு ஏக்கர் ரூ 2,40,000 = Rs.60,00,000/–

II. ஆவண எண் 2744/1964 படி:
திருவாரூர் மாவட்டம், பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம், உள்ளிக்கோட்டை சார்பதிவகம், மன்னார்குடி தாலுக்கா, 45.பைங்காநாடு கிராமம், புல எண் 1063ல், தென்பாகம் 33 சென்டில் பகுதி 25 சென்ட்.
நான்கெல்லை: கிழக்கில் சர்க்கார் ஒழுங்கை, மேற்கில் ரஞ்சிதத்தம்மாள் மனை, வடக்கில் சரஸ்வதி அம்மாள், தெற்கில் ரஞ்சிதத்தம்மாள் மனை
ஒரு ஏர்ஸ் Rs 2400/– வீதம் 10 ஏர்ஸ்.... Rs. 24,000/–

III. ஆவண எண் 809/2000 படி:
நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், தற்காலம் திருவாரூர் பதிவுமாவட்டம், மன்னார்குடி சார் பதிவகம், மன்னார்குடி டவுன், பழைய தஞ்சாவூர் ரஸ்தா, வார்டு 1, பிளாக் 65, புல எண் 4487ல் 6082½ சதுரடியில் தென்புறமாய் 2500 சதுரடியில் 1/6 = 417 சதுரடி
நான்கெல்லை : மேற்கில் ராமையன் வீடு மனை, கிழக்கில் பாதை, வடக்கில் என்னுதான மனை, தெற்கில் அமராவதி மனை இதற்குட்பட்டது.
417 சதுரடிக்கு, சதுரடி ரூ 1000/– வீதம் ...Rs. 4,17,000/–

IV. ஆவண எண் 550/2003படி:
நாகப்பட்டினம் பதிவுமாவட்டம், தற்காலம் திருவாரூர் பதிவு மாவட்டம், மன்னார்குடி சார் பதிவகம், மன்னார்குடி டவுன், வார்டு 1, பிளாக் 65, பழைய புலஎண் 4484, புதிய புல எண் 15, சதுரடி 7404ல் 1/6 பாக சதுரடி 1234
நான்கெல்லை: கிழக்கில் சரோஜா மனை, மேற்கில் பூக்கொல்லை சாலை வடக்கில் எம். தங்கவேல் மனை, தெற்கில் ரோடு. இதற்குட்பட்டது
1 சதுரடிக்கு ரூ. 600/ வீதம் 1/6 பாக சதுரடி 1234 க்கு ..7,40,400/.

V. ஆவண எண் 2082/2005 படி:
நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், தற்காலம் திருவாரூர் பதிவுமாவட்டம், மன்னார்குடி சார்பதிவகம், மன்னார்குடி தாலுக்கா, பைங்காநாடு கிராமம் புல எண் 136/13C க்கு 0.15.5 ஏர்ஸ்க்கு 21 2/3 செண்ட்
நான்கெல்லை : மேற்கில் இதன் பாக்கி பங்கான எங்கள் மனை, கிழக்கில் தங்கள் பங்கு, வடக்கில் ராஜப்பா பங்கு தெற்கில் ரோடு இதற்குட்பட்டது.
ஒரு ஏர்ஸ் Rs 2400/– 21 2/3 ஏர்ஸ் .... Rs. 51,200/–

VI. திருமக்கோட்டை கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சிட்டாபடி:
திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, திருமக்கோட்டை –I வருவாய் கிராமம், பட்டா எண் 334. கிருஷ்ணமூர்த்தி பெயரிலுள்ள
2. புல எண் 539–1ல், 01–11–00 ஹெக்டேர், நான்கெல்லை: கிழக்கில் கிருஷ்ணமூர்த்தி வாண்டையார், மேற்கில் ராஜப்பா மழவராயர், வடக்கில் கோவிந்தராஜ் வாண்டையார், தெற்கில் கணேச வாண்டையார்
ஹக்டேர் 4,94,500/– வீதம் 1.11.0 ஹக்டேர்ஸ்க்கு .... Rs. 5,48,895/–

VII. ஆவண எண் 1267/2010 படி:
விருதாச்சாலம் பதிவு மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தாலுக்கா, மங்களம்பேட்டை சார்பதிவகம், புல்லூர் கிராமம்,
2. புல எண் 408-3Bல், 0–66–00 செண்ட். நான்கெல்லை ஆவணத்தில் சொல்லப்பட வில்லை.
0.66.0 சென்டுக்கு கிரய ஒப்பந்த ஆவண மதிப்பு .. Rs. 66,000/–

**T.Sathiyaseelan, B.E., L.L.B.,**
**Advocate**
**19, Vinobaji Street, Cell : 99768 72333**

## உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
## த.ப.எண். 55/2025

தனபால், த/பெ. பெரமையன் 2/47, பேட்டைத்தெரு, உள்ளிக்கோட்டை, மன்னார்குடிTK, திருவாரூர் மாவட்டம்.

மனுதாரர்

–எதிர்–

வட்டாட்சியர் மன்னார்குடி எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்கண்ட வழக்கில்மனுதாரரின் தாயார் லெட்சுமி என்பவர் கடந்த 19.12.2020 தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர் மனுதாரர் பதிந்துவரும் இறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து ஒரு வாரக் காலத்திற்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது

**V.K.சண்முகா** B.Sc., B.L.,
**S.சூரியபிரசாத்** B.A., B.L.,
வழக்கறிஞர்கள், மன்னார்குடி

## உயர்திரு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், மன்னார்குடி
## C.M.P.No.165/2025

ஆஷாத், த/பெ.கோவிந்தராஜ், 4/474, காமராஜர் தெரு, ராதா நஞ்சை, கோமல் அஞ்சல், திருக்கரவாசல், திருவாரூர் Dt

மனுதாரர்

–எதிர்–

1.வட்டாட்சியர், நீடாமங்கலம்
2.சார்பதிவாளர், நீடாமங்கலம்

எதிர்மனுதாரர்கள்

**அறிவிப்பு**

மேற்கண்ட மனுதாரர் ஆசாத் என்பவர் கடந்த 20.04.1988 ஆம் தேதி அன்று வடக்குத்தெரு, ராயபுரம், நீடாமங்கலம் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் என்ற முகவரியில் பிறந்ததை எதிர் மனுதாரர்கள் பதிந்துவரும் பிறப்பு பதிவேட்டில் பதியவேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவை பொறுத்து யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் தெரிவித்துக் கொள்ளலாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது..

**V. ஜெயபாலன்** B.Sc., B.L.,
வழக்கறிஞர் & நோட்டரி
மன்னார்குடி

## வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்
## த.ப எண்.40/2025
## நாள்.24.01.2025

கார்த்திக், த/பெ.சண்முகம், 379 மந்தைகாரத் தெரு, செருகுடி, கல்லூர் கிராமம், கும்பகோணம்.

– மனுதாரர்

– எதிர் –

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் கும்பகோணம்.

– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது பாட்டி "பார்வதி" என்பவர் கடந்த 19.03.1987 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

கார்த்திக்,
மனுதாரர், கும்பகோணம்.

## வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்
## த.ப எண்.417/2025
## நாள்.18.07.2025

ராஜன், த/பெ.கிருஷ்ணமூர்த்தி, 208 திருவாசகம் தெரு, ஈக்காட்டுதாங்கல், கிண்டி வட்டம், சென்னை.

– மனுதாரர்

– எதிர் –

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் கும்பகோணம்.

– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் "ராஜன்" தான் கடந்த 23.04.1962 அன்று மேலகஞ்சமேடு, பாபநாசம் என்ற முகவரியில் பிறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

ராஜன்,
மனுதாரர், சென்னை.

## சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நிர்வாக நடுவர் அவர்கள், குளித்தலை.
## ஒ.மு.அ 2/4009/2025

P.ஜீவானந்தம், த/பெ.பாலகிருஷ்ணன், மேல குட்டப்பட்டி, வைகைநல்லூர் தெற்கு கிராமம், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம்.

– மனுதாரர்

– எதிர் –

வட்டாட்சியர், குளித்தலை.

– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி முகவரியில் வசித்து வரும் மனுதாரர் P.ஜீவானந்தம் என்பவரது தனது பாட்டனார் "மலையாளம்" என்பவர் மேற்கூறிய முகவரியில் உள்ள வீட்டில் 05.10.1999 அன்று இறந்தார் என்று கூறி இறப்பு சான்றிதழ் வேண்டி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் குளித்தலை சார் ஆட்சியர் அலுவலகத்தில் 7 தினங்களுக்குள் தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக உத்தரவாகிவிடும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

P.ஜீவானந்தம், மனுதாரர்,
மேல குட்டப்பட்டி,

## வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மயிலாடுதுறை

பரமசிவம், த/பெ.சாமிநாதன், கீழத் தெரு, திருவிழிமிழலை, குடவாசல் வட்டம் திருவாரூர் மாவட்டம்.

– மனுதாரர்

வருவாய் கோட்டாசியர், மயிலாடுதுறை.

– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் எனது தாயார் "சரஸ்வதி" க/பெ.சாமிநாதன் என்பவருக்கு இறப்பு சான்று வேண்டல். மேற்படி விலாசத்தில் மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் வட்டம், கீழபருத்திகுடிகிராமம் என்பவர் கடந்த 10.07.1999 ஆண்டு மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்: பரமசிவம்,
குடவாசல் வட்டம்.

## வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மயிலாடுதுறை

ஜெயதுர்கா, க/பெ. சீனிவாசன், தெற்கு தெரு, கிடத்தலைமேடு, 26காளி, மயிலாடுதுறை மாவட்டம்

– மனுதாரர்

வருவாய் கோட்டாசியர், மயிலாடுதுறை.

– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனக்காக "ஜெயதுர்கா" க/பெ,சீனிவாசன் என்பவருக்கு பிறப்பு சான்று வேண்டல். மேற்படி விலாசத்தில் மனன்பவர் கடந்த 09.05 .1984 ஆண்டு மேற்படி விலாசத்தில் பிறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்: ஜெயதுர்கா,
26,காளி,
மயிலாடுதுறை மாவட்டம்

## வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் சீர்காழி.

பன்னிர்செல்வம் த/பெ.ஏகாம்பரம், மேலத் தெரு, வழுதலைக்குடி, 41.திருமுல்லைவாசல் கிராமம், சீர்காழி வட்டம், மயிலாடுதுறை.

– மனுதாரர்

வருவாய் கோட்டாசியர், சீர்காழி.

– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை "ஏகாம்பரம்" த/பெ.முருகையன் என்பவருக்கு இறப்பு சான்று வேண்டல் .மேற்படி விலாசத்தில் கடந்த 12.07.2022 ஆண்டு மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்: பன்னீர்செல்வம்,
41திருமுல்லைவாசல் கிராமம்,
சீர்காழி வட்டம்.

## வருவாய் கோட்டாச்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் மயிலாடுதுறை

தவசிமுத்து, த/பெ.ராஜா, ஆற்றங்கரை தெரு, வில்லியநல்லூர் கிராமம், மயிலாடுதுறை மாவட்டம்

– மனுதாரர்

வருவாய் கோட்டாசியர், மயிலாடுதுறை.

– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை "ராஜா" த/பெ.காசிநாதன் என்பவருக்கு இறப்பு சான்று வேண்டல். மேற்படி விலாசத்தில் மயிலாடுதுறை மாவட்டம் கேசிங்கன் கிராமம். பழவனாற்றுகரையில் என்பவர் கடந்த 17.07.2022 ஆண்டு மேற்படி விலாசத்தில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்: தவசிமுத்து,
வில்லிநல்லூர் கிராமம்,
மயிலாடுதுறை மாவட்டம்

## வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கும்பகோணம்
## த.ப எண்.441/2025
## நாள். 25.07.2025

சர்புதீன், த/பெ. லில், மெயின் ரோடு, எஸ். புதூர், திருவிடைமருதூர்

– மனுதாரர்

– எதிர் –

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் கும்பகோணம்.

– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது தந்தை "ஜலில்" என்பவர் கடந்த 08.06.2008 அன்று மேற்படி முகவரியில் இறந்ததை பதிவு செய்யக்கோரி எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி அலுவலகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம்.

சர்புதீன்,
மனுதாரர், திருவிடைமருதூர்.



திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர பெட்ரோல் ஸ்கூட்டர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே ஆகியோர் உள்ளனர்.

### தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க

# முதல்வர் ஸ்டாலின் செப்டம்பரில் அமெரிக்கா, ஜெர்மன் செல்கிறார்

சென்னை, ஆக. 12-

தொழில் முதலீடுகளை ஈர்க்க முதல்வர் மு.க.ஸ்டாலின் மீண்டும் வெளிநாடு பயணம் மேற்கொள்கிறார். வருகிற 31-ம் தேதி முதல் செப்டம்பர் 10-ம் தேதி வரை இங்கிலாந்து, ஜெர்மனி நாடுகளுக்கு முதல்வர் செல்ல இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் 2021-ம் ஆண்டு மே மாதம் தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற நிலையில், தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

அந்த வகையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் இதுவரை ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர், ஜப்பான், ஸ்பெயின் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்து, மொத்தம் ரூ.18,498 கோடி மதிப்பிலான தொழில் ஒப்பந்தங்களை மேற்கொண்டு, ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளார்.

இந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலினின் மீண்டும் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு, தமிழ்நாட்டுக்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க திட்டமிட்டு உள்ளார்.

வருகிற 31-ம் தேதி முதல் செப்டம்பர் 10-ம் தேதி வரை இங்கிலாந்து, ஜெர்மனி நாடுகளுக்கு முதல்வர் செல்ல இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலினின் வெளிநாட்டு சுற்றுப்பயண விவரம் விரிவாக தயாரிக்கப்பட்டு வருகிறது.

வெளிநாடு பயணத்தின் போது தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளை முதல்வர் சந்திக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்புகளின் மூலம், தமிழகத்தில் உயர்தர வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், பொருளாதார வளர்ச்சியை மேலும் துரிதப்படுத்துவதற்கும் முக்கியமான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இங்கிலாந்து மற்றும் ஜெர்மனியில் உள்ள முன்னணி தொழிலதிபர்களைச் சந்தித்து, தமிழகத்தில் தொழில் தொடங்க அழைப்பு விடுக்க உள்ளதாகவும், இந்தப் பயணத்தில் முதல்வருடன், தலைமைச் செயலர் முருகானந்தம், நிதி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா மற்றும் பல முக்கிய அரசு அதிகாரிகள் உடன் செல்ல இருப்பதாகவும் கூறப்படுகிறது.



சென்னை நந்தனம் அரசு கலைக்கல்லூரியில் காவல்துறையின் சார்பில் நடைபெற்ற "போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடு" நிகழ்ச்சியில் தமிழ்நாட்டில் போதைப்பொருள் உற்பத்தி, சட்டவிரோத கடத்தலை ஒழிப்பது மற்றும் போதைப்பொருள் வழக்குகளில் சிறப்பாக பணியாற்றிய காவல்துறை அலுவலர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு 2025-ம் ஆண்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சர் காவலர் சிறப்பு பதக்கங்களை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார். அருகில் அமைச்சர் கோவி.செழியன், கூடுதல் தலைமைச்செயலாளர் அதுல்ய மிஸ்ரா உள்ளனர்.

# நவ. 1, 2-ம் தேதிகளில் ஆசிரியர் தகுதித்தேர்வு

## தேர்வு வாரியம் அறிவிப்பு

சென்னை, ஆக. 12-

ஆசிரியர் தகுதித் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் தேர்வு வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஆசிரியர் தேர்வு வாரியம் இந்தாண்டு (2025) தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வு (தாள்-I மற்றும் தாள் - II) நடத்துவதற்கு உத்தேசித்து அறிவிக்கையை A (Website: http://www.trb.tn.gov.in) 11.08.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

கல்வித்தகுதி மற்றும் விண்ணப்பம் சார்ந்த அனைத்து விவரங்களும் அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்விற்கு விண்ணப்பம் செய்ய விரும்பும் விண்ணப்பதாரர்கள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க 11.08.2025 முதல் 08.09.2025 பிற்பகல் 5.00 மணி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அறிவிக்கை தொடர்பான கோரிக்கை மனுக்கள் trbgrievances@tn.gov.in என்ற மின்னஞ்சல் வாயிலாக பெறப்படும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



புதுடெல்லியில் மத்திய அரசின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானாந்தா சோனோவாலை நேற்று தமிழ்நாடு அரசின் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் சந்தித்து சாகர்மாலா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மேம்படுத்தப்பட வேண்டிய சிறு துறைமுக திட்டங்களை விரைவில் செயல்படுத்த வலியுறுத்தி கோரிக்கை மனுவினை வழங்கினார்.



கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதி ராயக்கோட்டை பேருந்து நிலையம் அருகே நேற்று அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி தனது 3-வது தேர்தல் சுற்றுப்பயணத்தை தொடங்கிய அவர் தொண்டர்கள் மத்தியில் பேசினார். அருகில் அ.தி.மு.க. துணை பொதுச்செயலாளர் கே.பி.முனுசாமி, முன்னாள் எம்.பி. தம்பிதுரை ஆகியோர் உள்ளனர்.

# த.வெ.க. தலைவர் விஜய்யுடன் தூய்மை பணியாளர்கள் சந்திப்பு

சென்னை, ஆக. 12-

பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்தில் த.வெ.க. தலைவருடன் விஜயுடன் தூய்மை பணியாளர்கள் சந்தித்து பேசினர்.

சென்னை மாநகராட்சி ராயபுரம், திரு.வி.க.நகர் ஆகிய மண்டலங்களின் தூய்மை பணியை தனியார் நிறுவனத்துக்கு மாநகராட்சி நிர்வாகம் வழங்கியதைக் கண்டித்து உழைப்பவர் உரிமை இயக்கம் சார்பில் அந்த மண்டலங்களின் தூய்மை பணியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பணி நிரந்தரம், பணிப்பாதுகாப்பு, ஊதிய நிர்ணயம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை மாநகராட்சி அலுவலகமான ரிப்பன் மாளிகை முன்பு 11- வது நாளாக தொடர் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களுடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, சேகர்பாபு, மேயர் பிரியா, மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஆகியோர் நடத்திய பேச்சு வார்த்தை தோல்வியடைந்துள்ளது.

இதனால், தூய்மை பணியாளர்களின் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தூய்மை பணியாளர்கள் நேற்று த.வெ.க. தலைவர் விஜய்-ஐ சந்தித்தனர். சென்னை பனையூரில் உள்ள த.வெ.க. அலுவலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தூய்மை பணியாளர்களின் குழுவினர் த.வெ.க. தலைவர் விஜய்-ஐ சந்தித்தனர்.

இந்த சந்திப்பின்போது போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தூய்மை பணியாளர்களுக்கு விஜய் ஆதரவு தெரிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# அரசு கல்லூரிகளில் எம்.எட். மாணவர்கள் சேர்க்கை ஆக.26-ம் தேதி முதல் துவக்கம்

## அமைச்சர் கோவி.செழியன் தகவல்

சென்னை, ஆக. 12-

அரசு கல்லூரிகளில் எம்.எட். மாணவர்கள் சேர்க்கை 26.08.2025 முதல் 29.08.2025 வரை நடைபெறும் என உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

2025-26-ம் கல்வியாண்டிற்கான அரசு கல்வியியல் கல்லூரிகளில் எம்.எட் (M.Ed.) மாணாக்கர் சேர்க்கைகான இணையதள விண்ணப்பப் பதிவு நேற்று (11.08.2025) முதல் 20.08.2025 வரை நடைபெறவுள்ளதாக உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் அவர்கள் தெரிவித்துள்ளார். இது குறித்து உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்நாட்டில் எம்.எட். பாடப்பிரிவுகள் கொண்டுள்ள 6 அரசு கல்வியியல் கல்லூரிகளில் 300 இடங்கள் உள்ளன. இவ்விடங்களுக்கு 2025-26ஆம் கல்வியாண்டில் மாணாக்கர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் நேற்று (11.08.2025) முதல் இணையவழியில் தொடங்கும். மாணாக்கர்கள் www.tngasa.in என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பப் பதிவினை மேற்கொள்ளலாம். மேற்படி இணையதள முகவரியில் 20.08.2025 வரை பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. பின்னர், இதற்கான தரவரிசைப் பட்டியல் 25.08.2025 அன்று வெளியிடப்படும்.

மாணாக்கர் சேர்க்கை 26.08.2025 முதல் 29.08.2025 வரை நடைபெறும். மேலும், முதலாம் ஆண்டு வகுப்புகள் 01.09.2025 அன்று முதல் துவங்கும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### இணையவழி சூதாட்டம்:

# அமலாக்கத்துறை முன்பு நடிகர் ராணா ஆஜரானார்

டெல்லி, ஆக. 12-

சட்டவிரோத இணைய வழி சூதாட்ட வழக்கு தொடர்பான அமலாக்கத் துறை விசாரணைக்கு நடிகர் ராணா டகுபதி திங்கள்கிழமை ஆஜரானார்.

சட்டவிரோதமாக இணையத்தில் பந்தயம் கட்டி விளையாடுவதற்கான பல சூதாட்ட செயலிகள், முறைகேடான வழியில் கோடிக்கணக்கில் பணம் ஈட்டியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுதொடர்பான பணமுறைகேடு வழக்கில், தெலங்கானா மாநிலம் ஹைதராபாதில் உள்ள அமலாக்கத் துறை மண்டல அலுவலகத்தில், வெவ்வேறு தேதிகளில் விசாரணைக்கு ஆஜராக நடிகர்கள் ராணா டகுபதி, பிரகாஷ் ராஜ், விஜய் தேவரகொண்டா, நடிகை லட்சுமி மஞ்சு ஆகியோருக்கு கடந்த வாரம் அமலாக்கத் துறை சம்மன் அனுப்பியது.

ஏற்கெனவே, பிரகாஷ் ராஜ், விஜய் தேவரகொண்டா நேரில் ஆஜராகி அமலாக்கத் துறை அதிகாரிகளின் கேள்விகளுக்கு பதிலளித்தனர்.

இதனிடையே, கடந்த ஜூலை 23 ஆம் தேதி ராணா டகுபதிக்கு சம்மன் அனுப்பப்பட்டிருந்த நிலையில், அவர் ஆஜராகவில்லை.

மேலும், விசாரணையை வேறு தேதிக்கு ஒத்திவைக்க வேண்டும் என்று அவரது சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிலையில், அமலாக்கத்துறையின் இரண்டாவது சம்மனை ஏற்று, ஹைதராபாத் அலுவலகத்தில் திங்கள்கிழமை காலை ராணா ஆஜராகியுள்ளார்.



மதுரையில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. தலைமையில் அ.தி.மு.க. மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி வரி விதிப்பு முறைகேடு தொடர்பாக விசாரணை நடத்தி வரும் மதுரை சரக டி.ஐ.ஜி. அபிநவ்குமாரிடம் மனு அளித்தனர். இதில் வில்லாபுரம் ராஜா, பா.குமார், பைக்காரா கருப்பசாமி, வக்கீல் தமிழ்செல்வம், விளாங்குடி சித்தன், மாமன்ற எதிர்கட்சி தலைவர் சோலராஜா, சண்முகவள்ளி, ரூபினிகுமார், ஏ.மாயத்தேவன், ஜெ.மாணிக்கம், எஸ்.எம்.டி.ரவி, பி.கே.எம்.மாரிமுத்து, வசந்தாதேவி,நாகஜோதிசித்தன், முத்துமாரி ஜெயக்குமார், பிரேமா டிமிட்டிராவ், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உள்ளனர்.